
குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 22 ] சோபகிருது ஆண்டு ஆனித்திங்கள் 10—7—63 [ இதழ் 8



தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர்

## அருள்வாக்கு

இருளுதய நீக்கும்
 இரவியைப்போல் என்னுள்
அருளுதய நன்கு
 யருளி — மருளுதய
மாற்றியவன் ஆரூரன்
 மாமறையும் ஆகமமுஞ்
சாற்றியஞா னப்பிரகா
 சன். (7)


ஆசிரியர் :-

வித்துவான்,

சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

வித்துவான்,

சோ. சிங்காரவேலன், M. A.



உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 22 | 10–7–63 | இதழ் 8


## உட்பொருள்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | தருமையும் கமலையும் - விரிதமிழ்க் கூடலும் | ... 397 |
| 2 | வணக்கம் | ... 401 |
| 3 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை | ... 402 |
| 4 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளாசி நமது கடமை | ... 406 |
| 5 | சிவஞானபோதச் சிற்றுரை | ... 411 |
| 6 | சித்தாந்த வினாவிடை | ... 413 |
| 7 | தொல்காப்பியச் சொல்லதிகார — விளக்கக் கட்டுரைகள் | ... 417 |
| 8 | சஹஸ்ராகமம் | ... 421 |
| 9 | ஸ்ரீ வன துர்க்கைத் தசநாமாவளி | ... 423 |
| 10 | மணிமேகலை | ... 425 |
| 11 | திருநாவுக்கரசு சுவாமிகள் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் | .. 432 |
| 12 | திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு | ... 438 |
| 13 | மதிப்புரை | ... 441 |
| 14 | செய்திகள் | ... 442 |
| 15 | எதிர்காலம் | ... 445 |


### அட்டைப்பட விளக்கம்

குருபூஜை விழாவில், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் காவிரித்திருமஞ்சனத்திற்கு எழுந்தருளல்.

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 22 ] சோபகிருது – ஆனி – 10—7—63 [ இதழ் 8

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## தருமையும் கமலையும் - விரிதமிழ்க் கூடலும்

தருமையில் 4-ஆவது பட்டமாக வீற்றிருந்த ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மேல் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பாடியருளிய பண்டார மும்மணிக்கோவையில் தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும் திருநகராக அரசு வீற்றிருந்த, தருமை ஞான தேசிகரைப் புகழ்ந்துள்ளார்கள். மதுரை ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானை ஆன்மார்த்த மூர்த்தியாகக் கொண்டுள்ளவர்கள்

தருமையாதீன குருமூர்த்திகள்; ஆதலின் இவ்வாறு ஓதியருளியுள்ளார்கள். கமலை ஞானப்பிரகாசர் ஸ்ரீ குருஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளுக்கு ஞானுசாரியராக வீற்றிருந்தவர்களாதலின், கூடல், கமலை (திருவாரூர்) தருமை மூன்று தலங்களும் தொடர்புடைய தலங்களாயின. மதுரையிலிருந்து திருவருள் பெருகிக் கமலையிற் குருவருளோடு குழைந்து தருமையில் பேரருளாகப் பொங்கிவழிந்த பிரவாகமே தருமையாதீன உபதேச மரபாகும் என்பது உய்த்தறிந்து உவத்தற்குரியதாகும்.

திருமதுரைத் திருநகரைக் கூறவந்த குமரகுருபர சுவாமிகள் அதனை 'விரிதமிழ்க் கூடல்' என்று விளக்கியுள்ளது அறிந்து மகிழத்தக்கது

'தமிழொடு பிறந்து பழமதுரையில் வளர்ந்தகொடி
சப்பாணி கொட்டியருளே'

என்றருள்வார்கள் மீனுட்சியம்மைப் பிள்ளைத்தமிழிலும். பழமையான மதுரைமாநகரோடு தமிழ் மிகத் தொடர்புடையது. தமிழ்ச்சங்கங்கள் மதுரைமாநகரிலேயே தழைத்தன. சங்கநூல்கள் அனைத்தும் அத்திருநகரிலேயே தோன்றின. இறைவனே சங்கத்தமிழின் தொடக்கக் காலத்தில் இருந்து தமிழாய்ந்தான்; முருகனும் சங்கப்புலவராக இருந்து தமிழ் நுகர்ந்தான்; அம்மையும் தடாதகா பிராட்டியாராகத் தோன்றித் தமிழரசு செலுத்தினள். இம்மூவரும் 'தண்டமிழ் மதுரம் கூட்டுண எழுந்த வேட்கையால்' இவ்வாறு அங்கு வந்து வாழ்ந்தார்கள் எனில் 'கோழிதமிழ்ப் பெருமை யாரறிவார்' என்று கூறியருள்வார்கள் குமரகுருபர சுவாமிகள்.

'தண்ணூர் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானை' என்பது மணிமொழி. இத்தகு மதுரை இன்பத்தமிழ் மதுரை. அங்கயற்கண்ணியும் ஆலவாய்ச் சோக்கரும் வீற்றிருக்கும் துவாதசாந்தத் தலம். சிவராஜதானியாகத் திகழுந் திருத்தலம் :

"தண்டமிழ் வேலித் தமிழ்நாட்டகமெல்லாம்
நின்று நிலைஇப் புகழ்பூத்த லல்லது
குன்றுதலுண்டோ மதுரை கொடித்தேரான்
குன்றமுண்டாகும் அளவு"

என்று பரிபாடல் பாராட்டும். புராணச் சிறப்பும், மூர்த்தி தலத் தீர்த்தச் சிறப்பும உடையது.

"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி
நற் கனகக்கிழி தருமிக்கு அருளினேன்காண்"

என்பது அப்பர் அருள்வாக்கு. இத் திருக்கோயில் திருப்பணி செய்யப்பெற்று மிகப் பெருஞ்செலவில் 28—6—63 அன்று மகாகும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் நல்லன எல்லாவற்றிலும் நற்பங்கு பற்றும் கருணைவள்ளலாக விளங்கி வருபவர்கள் தம் ஆன்மார்த்த மூர்த்தி திருக் கோயிலுக்கு மகா கும்பாபிஷேகம் என்றால் அத்திருவுள்ளம் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேது? இலட்சத்தோரு வெண் பொற்காசுகளைக் கும்பாபிஷேகத் திருப்பணிக்கு வழங்கி மகிழ்ந்தார்கள் செந்தமிழ்ச்சொக்கர் திருவருளில் செம்மாந்து நிற்கும் சிறப்புடையவர்கள்; ஆதலினால் இக் கோடைவளம் காட்டினார்கள். திருப்பணிக்குழுததலைவர் திரு பி. டி இராஜன் அவர்கள் நல்லன்பர் பலருடன் கூடி இத் திருப்பணியில் மனமார ஈடுபட்டார்கள்; பக்தி சிரத்தையுடன்பலரும் போற்ற இதனை முடித்தார்கள். அனைவரும் பாராட்டத்தக்க வகையில் அங்கயற்கண்ணி, சொக்கலிங்கப் பெருமான் அலய மகா கும்பாபிஷேகத்தை நிகழ்த்திய பெருமை தமிழவேளுக் குரியது காசிமுதலிய இடங்களிலிருந்து யாகசாலைக்கு வேண்டிய பொருள்கள் வரவழைத்து அளிக்கப்பட்டன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களும் மதுரைக்கு எழுந்தருளி யாகசாலை பூசையை வழிபட்டார்கள். மீண்டும் மூலமூர்த்தி களுக்கு உடனிருந்து நவரத்தினங்கள் போட்டு அஷ்டப ந்தனம் சாத்தி மகிழ்ந்தார்கள். மகாகும்பாபிஷேகத்தையும் கண்டு அருள்பெருக்கி மகிழ்ந்தார்கள் பாரத நாட்டின் பல பகுதிகளிலிருந்தும திரளான மக்கள் கூடிக் களித்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் தருமை, கமலை ஆகிய தலங்களுடன் விரிதமிழ்க் கூடலை உயிர்த்தலமாகக் கருதி வருபவர்கள்; மீனாட்சியம்மையிடமும். அபிராமியம்மையிடமும் அவர்கள் கொண்டிருக்கும் பக்தி அளவிடற்கரியது. அவர்கள் மதுரை மகாகும்பாபிஷேகத்தன்று ஆங்குச்சென்று வீற்றிருந்தருளி உடனிருந்து சிவபுண்ணியம் பெருக்கிய காட்சி என்றும் மறக்க வியலாதது; தமிழ் நாட்டின் சமயத்தலைவர்களை அத் திருத்தலத்தில் ஒருங்கு கண்டு உய்யும் பேறும் மக்களுக்கு வாய்த்தது. அதுமட்டுமின்றித் தருமையும் கூடலுமாகியதலங்களுக்கிடையேஉள்ள அருளுறவை அனைவரும் அறிதற்கும் இது ஓர் வாய்ப்பாயிற்று என்று கூறுவதிற் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

I had the pleasure of visiting the Vaithiswaran temple well managed by the Dharmapuram Adheenam. This temple is really awe-inspring Cleanliness is next to Godliness. This temple is kept very clean. My wife Srimathi Kamaladevi was very much moved by the way ceremonies were performed. The saiva (Hindu) public whether they are in India, Ceylon, Malaya, Burma, or S. Africa should be grateful to His Holiness for managing this temple for the benifit of Hindus living all over. May this temple continue to prosper.

(Sd.) Arul Thiagarajan,
7—7—63 Senior Programme Executive, Radio Ceylon. Colombo.

(Sd.) Kamaladevi Thiagarajan,
7—7—63 Ramanathan College, Chunnakam, Ceylon.

# வணக்கம்

திருவாசகம் ஆன்ம வாழ்க்கைக்கு ஒளி காட்டும் உயர் ஞானப் பனுவல். மணிவாசகப் பெருமான் தந்த ஞானத் தேன். இதிலிருந்து அருட்பத்து என்ற பகுதியை எடுத்துக்கொண்டு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் தம் அருளுரையில் ஞான மணம் பெருக்குகின்றார்கள். "எங்கள் நாயகனே! என்னுயிர்த் தலைவா" என்று பெருமானார் பேசும் இவ்வருட்பகுதி நேயர்கள் உள்ளத்தில் இவ்வாறு பதிகின்றது.

தருமையில் ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவில் எழுந்தருளி யுள்ள வனதுர்க்கையின்மீது பாடப்பெற்ற தமிழ்ப் பாடல்கள் இவ்விதழில் வெளிவருகின்றன. வனதுர்க்கைமீது அன்பர்கள் பாடியனுப்பியிருக்கும் சில அரிய பாடல்கள் வரும் இதழ்களில் அவ்வப்போது வெளிவரும்.

மதுரைக் கும்பாபிஷேகம் பற்றிய தலையங்கக் கட்டுரை, சொல்லதிகார விளக்கம், சித்தாந்த வினாவிடை, சஹஸ்ராகமம் முதலிய தொடர்க் கட்டுரைகள் வழக்கம்போல் மலர்ந்துள்ளன.

மணிமேகலை இலக்கிய நாடகத்தில் ஒரு முக்கியமான கட்டம்; உதயகுமரன் மணிமேகலைமீது காதல்கொண்டு மலர்வனம் புகுந்த காட்சி நேயர்களுக்கு மனக்கிளர்ச்சியை ஊட்டி நாடகம் தொடர்கின்றது.

திருநாவுக்கரசுப் பெருமானார் வரலாற்றுக் கட்டுரை திருவாரூர்க் கும்பாபிஷேகத்தையொட்டி வெளிவருகின்றது. சிவஞானபோத உரையில் வரும் இலக்கணக் குறிப்புக்களுக்கும் விளக்கம் தரும் கட்டுரைத் தொடர் தொடங்குகின்றது.

ஆதீன குருபூசை உற்சவ நிழற்படங்கள் ஆங்காங்கு உள்ளன. இவ்வாறு வாசக நேயர்களின் கரங்களில் இவ் விதழை வழங்குவதிற் பெருமகிழ்வு எய்துகின்றோம்.

உ

குருபாதம்

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

# அருளுரை

" திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந்துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
இருந்தவா றெண்ணி ஏசறு நினைந்திட்
டென்னுடை எம்பிரான் என்றென்(று)
அருந்தவா நினைந்தே ஆதரித் தழைத்தால்
அலைகடல் அதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி இதுகாண்
போதராய் என்றருளாயே " —மணிவாசகர்.

திருவாசகம் எட்டாந் திருமுறையாக விளங்குவது. மணிவாசகப் பெருமானுடைய பேரன்பின் பிழம்பாகத் திகழ்வது. திருவாசகத்திற் குருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார் என்ற மொழிக்கேற்பத் தன்னை ஒருமுறை ஓதுவோரையும் உள்ளம் உருக்கி ஒளி கூட்டுவது. பலதலைப்புக்களில் இதனுள் பக்தி பெருக்கும் பாடல்களைக் காணலாம். 'தேனூறும் வாசகங்கள்' என்று கூறுவதற்கேற்ப ஒவ்வொரு பாடலும் தேனாகத் தித்தித்து இறையனுபவத்தை எடுத்து விளக்குவது. இதனுள் இப்போது அருட்பத்து என்னும் பகுதி நம் சிந்தனைக் குரியதாகும் :

அருட்பத்து மகாமாயா சுத்தியை விளக்குவதாகும். திருப்பெருந்துறையில் அருளப்பெற்றது. இதன்கண் மணிவாசகப் பெருமான் அடியேன் ஆதரித்தழைத்தால் (அது - எந்து) அது என்ன என்று கேட்டு வந்து அருள்வாயாக என்று இறைவனை வேண்டுகின்றார்.

இறைவனைச் சோதியாக - பேரொளிப் பிழம்பாகக் கண்ட பெருமான் தம்முள்ளத்தே அவ்வொளியைத் தேக்கிச் 'சோதியே' என்று விளிக்கின்றார்கள். இந்தச் சோதியை மணிவாசக சுவாமிகள்.

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி"

எனவும்,

"பாரோர் விண்ணோர் பரவியேத்தும் பரனே பரஞ்சோதி"

எனவும்,

"இன்றெனக்கருளி இருள்கடிந்துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்"

எனவும்,

"சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே"

எனவும், பிறவிடங்களில் விளக்குகின்றார்கள். அவ்வாறே இப் பத்தின் முதற்பாடலிலும்,

"சோதியே சுடரே சூழொளிவிளக்கே"

என்றுவிளித்துப் போற்றுகின்றார்கள், இவ்வாறு சோதியாக, சுடராக, ஒளிவிளக்காக இருந்தாலும், அம்பிகை பாகனாக, மேலானவனாக, நீறணிந்த நிமலனாக அயனும் மாலும் அறியாத நீதியாக ஆதியாக இருக்கும் இறைவா உன்னை அடியேன் அன்பு கொண்டு அழைத்தால் நீ அன்புகொண்டு வந்து அருளாயோ என்று கூறுகின்றார்கள்,

நிருத்தனே, நிமலா! நீற்றனே! நெற்றிக்கண்ணனே! விண்ணுளோர் பிரானே! ஒருத்தனே! உன்னை ஓலமிட்டலறி உலகெலாம் தேடியும் காணேன் நீயே திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்றாய் என்று கூறி மகிழ்கின்றார்கள்.

"எங்கள் நாயகனே!" என்று அடியவர் தலைவனாக இருத் தலைக் கூறிப் பின்னும் தம் ஆன்ம நாயகன் என்று தம்முரிமை புலப்படுத்துவாராய் "என்னுயிர்த் தலைவா!" என்கின்றார்கள். எமக்கு வெளிப்பட்டருள்க என்று நான்முகனும் கண்ணனும்

வேண்ட அவர்கட்கு வியன் கழலாய் வெளிப்பட்ட விமலன் இறைவன். துய்க்கும் பொருளாயும் ஆற்றலாயும் உள்ளவன்; தூயவன்; வயிரத்தை ஒத்து விளங்கும் திருவெண்ணீறு சண்ணித்த மேனியன்; உள்குவார் மனத்தின் உறுசுவை அளிக்கும் அமுதன். அனைவருக்கும் அப்பன், மெய்யன், விகிர்தன்; என்றெல்லாம் கூறி ஏத்துகின்றார்கள்.

முத்திக் கடவுள்; முதல்வன், முக்கண்ணன்; முனிவன்; மலர் பறித்திறைஞ்சிப் பத்தியாய் நினைந்து பரவுவார்கட்குப் பரகதி கொடுத்து அருள்செய்யும் சித்தன்; அத்தன்" என்று அவ் வருள் வள்ளலை அடிபணிந்து பாமாலை தொடுக்கின்றார்கள்.

உலகியலில் ஈடுபட்டிருந்த தம்முன் வாழ்வை நோக்கி, ஆட் கொள்ளப்பெற்றபின் நிலையையும் பார்க்கின்ற சுவாமிகளுக்கு இறைவன் தமக்குச் செய்தருளிய மகோபகாரம் புலனாகின்றது. மருளிலே தோய்ந்துகிடந்த எமக்கு இறைவன் அருளிய கருணை யால் மறுமையும் இம்மையும் கெடுத்த திறம் புலனாகின்றது; பாடுகின்றார்கள்;

"மருளனேன் மனத்தை மயக்கறநோக்கி
மறுமையோடிம்மையும் கெடுத்த பொருளனே"

இவ்வாறெல்லாம் கூறிப் பரவிய சுவாமிகள் திருவுள்ளத்தில் இவ்வருட்பத்தில் நிறைவாக மலர்ந்த சிந்தனையே இந் நிறைவுத் திருப்பாட்டாகும்.

திருப்பெருந்துறை திருந்திய நீண்ட பல பொழில்களை உடையது. அதனுள் செழுமையான மலர்கள் பூத்துப் பொலிந்த குருந்த மரத்தின் அடியில் சிவபிரான் திருவுருவத் திருமேனி தாங்கி எழுந்தருளியிருந்து அருள்பாலித்த நிலையை எண்ணி எண்ணி மகிழ்கின்றது திருவுள்ளம்.

"திருந்து வார் பொழில் சூழ் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தமேவியசீர்
இருந்தவாறெண்ணி ஏசறு நினைந்திட்டு"

இவ்வாறிருந்த பெருமான் தமக்கு அருள் புரிந்து தம்முயிர்த் தலைவராக உள்ளே புகுந்திட்ட வித்தை சுவாமிகளுக்கு நினைக்க நினைக்க இன்பம்; தேனாய் - அமுதாய் இனிக்கும் இன்பம்:

" நானேயோதவஞ்செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்
தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே "

ஆதலால்,

" என்னுடை எம்பிரான் என்றென்று
அருந்தவா நினைந்தே ஆதரித்து அழைத்தால் "

என்று சுவாமிகள் தம் நோக்கம் கூறியருள்கின்றார்கள்; பிறவிக் கடலில் கிடக்கும் தம்மைக் கடலினின்றும் கரையேற்றுவது மட்டுமல்ல தம் பொறுப்பு; "கயிலை புகுநெறி இதுகாண்; போதராய் !" என்று வழிகாட்டி யருளவும் வேண்டும் என்று பிரார்த்திக்கின்றார்கள். இப்பிரார்த்தனையே இத்திருப்பாடலின் கடைசித் தொடராக அமைவதுடன் அருட்பத்தின் சுருங்கிய கருத்துரையாகவும் திகழ்கின்றது:

" அலைகடல் அதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி இதுகாண்
போதராய் என்றருளாயே "

நமக்கு வாய்த்த கயிலாய யாத்திரையில் முன்னின்றும், உண்ணின்றும், உடனின்றும் ஈர்த்துச் சென்ற திருவருள் ஆற்றலை எண்ணி வியவாத வேளை இல்லை. இந்நினைவை இப்பகுதி உண்டாக்குகின்றது.

கயிலையாகவே விளங்கும் கனகத்திரளாம் கண்ணுதற் கடவுள் அங்குப்புகும் நெறியும் காட்டிக் கைகொடுக்கும் கருணை வள்ளல். அவ்வள்ளல் அடியிணைகளே வழிகாட்டி உய்க்கும் வான்பொருளாக நிற்பவை. உலகு இந்நெறியின் நின்று இருமைப்பயனும் எய்துமாக. அருட்பத்து இந்நெறிகாட்டும் நற்றுணையாக நிற்கின்றது.

குருபாதம்

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

நாட்டு மக்களுக்கு வழங்கியருளிய

அருளாசி

# *நமது கடமை

இமயம் பாரத நாட்டின் வட எல்லையாக விளங்கி வருகிறது. இது நமது நாட்டிற்கே உரிய மலை. நமது மன்னர்கள் இமயத்தில் புலி, வில், கயல் சின்னங்களைப் பொறித்தார்கள். இமயத்தைத் தம்முடையதாக நிலைநாட்டிக்கொண்டார்கள். சங்க இலக்கியங்கள் இதற்குச் சான்று பகர்கின்றன. "பொற்கோட்டிமயமும் பொதியமும் போன்று நீ வாழ்க" என்று ஓர் அரசனை வாழ்த்துகிறார் புறநானூற்றுப் புலவர் ஒருவர். குற்றாலக் குறவஞ்சி ஆசிரியர் :-

"கயிலை எனும் வடமலைக்குத் தெற்குமலை அம்மே
கனகமா மேருவென நிற்குமலை அம்மே
கயிலைமலை தென்மலைக்கு வடக்கு மலை அம்மே"

என்று நாட்டு எல்லை கூறுகிறார்.

நம் நாட்டுக்கு உரிய இரண்டு திருமலைகளையும் இணைத்து அவற்றைப் போல் நீ வாழ்க என்று வாழ்த்துக்கள் கூறுவதன்

---

* ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் அருளாசி திருச்சி வானொலி நிலையத்தாரால் 20—5—63 திங்கட்கிழமை அஞ்சல் செய்யப்பெற்றது. வானொலி நிலையத்தாரின் அனுமதி பெற்று வெளியிடப்பெற்றது.

கருத்து இவை இரண்டும் நம் நாட்டு ஆட்சிக்கு உட்பட்டதே என்பதைக் குறிப்பதாகும்.

இத்தகைய இமயத் திருமலையில் தான் சைவத்திற்கு ஜீவ நாடியான திருக்கயிலாயமும், திருக்கேதாரமும் திகழ்கின்றன. வைணவத்திற்கு பத்ரி இருக்கின்றது. தேவியின் திருவுருவங்களாக நந்தாதேவி, நந்தகுண்ட் முதலிய உயர் உச்சிச் சிகரங்கள் ஓங்கி நின்று நமக்கு அரண் செய்கின்றன.

திருக்கயிலையைப் பெயர்க்க முற்பட்ட இராவணன் நிலை என்னவாயிற்று என்பதை வரலாறு காட்டும்.

" இருசுடர்மீது ஓடா இலங்கைக் கோனை
ஈடு அழிய இருபது தோளிறுத்தான் கண்டாய் "

" அருவரையை எடுத்தவன்றன்
சிரங்கள் பத்தும் ஐந்நான்கு தோளும் நெரித்து
திருவிரலால் அலற அன்று அடர்த்தவன் காண். "

என்றும், அப்பர் பெருமான் அருள்மொழிகள் சொல்கின்றன. அவனுடைய ஆட்சியின்கீழ் இருந்த நாட்டின்மீது சூரிய சந்திரர்களும், அவன் ஆணைக்கு அடங்கி அவன் சொல்வழி ஒளி வீசுவார்களாம். தேவர்கள் எல்லோரும் அவன் ஏவல் கேட்டு அடங்கி இருந்தனராம். இது போன்ற வலிமைமிக்க இராவணன் கயிலைத் திருமலைமீது தன் தேர் ஓடாது தடைப்படுதலைக் கண்டு கோபங்கொண்டு தனது இருபது கரங்களையும் செலுத்தி, அம்மலையைப் பெயர்க்க முற்பட்டான். தேவி அஞ்சினள். பெருமான் அதுகண்டு புன்முறுவல் கொண்டு, தமது திருப்பாதச் சிறுவிரலால் சிறிது ஊன்றலும் அவன் தோள்கள் இருபதும் நெரிந்து அவன் அலறி வீழ்ந்தான். நெடுங்குரல் எடுத்து அழுதான். இதனல், " இராவணன் " எனப் பெயர் பெற்றான்.

இன்றைக்கு 1400 ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த அப்பரடிகளும், அதற்குமுன் வாழ்ந்த காரைக்காலம்மையாரும் கயிலைக்கு இந்த ஊன் உடல் கொண்டு சென்றார்கள். அதற்கும் காலத்தால் முற்பட்ட திருமூலர் கயிலையிலிருந்து தென்தமிழ் நாட்டுக்கு வந்து தங்கி 3000 ஆண்டுகள் தவம் பெருக்கி திருமந்திரம் அருளினர் என்று பெரியபுராணம் கூறுகிறது. அதற்கு முன்னே வேதரிஷிகள் சென்று தவம் பெருக்கினார்கள். சிவதரி சனம்

கண்டார்கள். இறைவன் திருமணக் காலத்தில் அங்குத்தேவர் களும் மற்று முள்ளோர்களும் கூடிய காரணத்தால் வடகோடு தாழ்ந்து தென்கோடு உயர்ந்து பூமி சமநிலை யற்று இருந்தது. இறைவன் தமக்குச் சமமான அகத்தியரைத் தென்கோட்டுக்கு அனுப்பி சமன் செய்தார்.

தென்கோட்டில் அமர்ந்திருந்த அந்த அகத்தியருக்குத் தம் திருமணக் கோலங்காட்டினுர் இறைவன் என்ற வரலாறுகள் இமயமும் பொதியமும் நம் நாட்டைச் சேர்ந்தவை; அங்கு நம் இறைவன் இருந்து நமக்கு அருள் வழங்குகிருன் என்பதையும் தெரிவிக்கின்றன. அக்காலந்தொட்டே அங்கே சென்று வழி பட்டு ஆன்மசாந்தி பெற்று வருகிருர்கள் நம் மக்கள்.

இதுவல்லாமல் கயிலாயத்திற்கும், தென்னுட்டிற்கும் நெருங் கிய தொடர்பு உண்டு. தென்னுட்டுத் திருக்கோவில்கள் கட்டு வதற்கு முன் கயிலை சென்று கண்டு அங்குள்ள மண்டப அமைப் புக்கள் கோபுர அமைப்புக்கள் இவற்றை அடியொற்றித்தான் நம் பெருங் கோவில்கள் எழுந்தன; அதிலும் சிறப்பாகக் காஞ்சியில் உள்ள கயிலாய நாதர் கோவில் அதேபோல அமைக் கப்பட்டது போலும். இந்தக் காட்சியைக் காணும் வாய்ப்பு நமக்கும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன் கிடைத்தது. நமது நாட்டில் உள்ள குங்கிரி பிங்கிரி என்னும் கணவாய் உச்சியில் இராஜகோபுர அமைப்புக்களும், கோட்டைச் சுவர் அமைப்புகளும் இலிங்க உருவில் அமைந்த உருவத் தோற்றங்களும் காணலாம். கயிலைத் திருமலையில் திருமதில் அமைப்பும், பிரகாரங்கள், மண்டபங்கள், விமானங்கள் போன்ற னவும் மண்டப வர்க்கத் தொடர்புக் காட்சிகளும் நம்மை மெய் மறக்கச் செய்கின்றன. ஆகவே நம் கோவில்களை அமைப்ப தற்கு முன் திருக்கயிலை யாத்திரை சென்று கண்டுவந்து அமைத் திருக்கிருர்கள் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

உலகமக்கள் எல்லோரும் ஓர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்; ஓர் இனம்; சகோதரர்கள்; எல்லோருக்கும் சமவாய்ப்புக்கள் கிடைத்தல் வேண்டும்; யார்மீதும் யாரும் படைபலங்கொண்டு தாக்கி அவர்களை அடிமைப்படுத்தக்கூடாது; துன்பம் விளைத்தல் கூடாது; எல்லோரும் ஒருசேர வளரவேண்டும்; வாழவேண்டு மென்பன போன்ற பொதுக்கொள்கைகளில் ஊறிய நம்பிக்கை நம் நாட்டுக்கு உண்டு. உலக அரங்கில் இதற்காக யாருடைய விருப்பு, வெறுப்பையும் பொருள் செய்யாது உழைத்து வரு கிறது.

அந்த உயர் லட்சியங்களில் அழுந்திய நம்பிக்கை கொண்டு நம் நாட்டின் தொழில் வளர்ச்சியிலும், வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதிலும் நம் அரசாங்கம் முழுமூச்சாக ஈடுபட்டு வருகிறது. மிகவும் வளமுடைய நாடுகளும் கண்டு வியக்கத்தக்க முறையில் திட்டங்கள் தீட்டி செயலாற்றி வருகிறது. இந்த நிலைக்கு ஒரு சோதனையாக வந்திருக்கிறது. இந்தச் சீன பாரத எல்லைச்சண்டை. வலுவில் வந்து வட எல்லையில் இமயப் பகுதியில் ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறார்கள் சீனர்கள். சமாதானம் பேச முன்வந்த நாடுகளின் பேச்சுக்களை வெற்று வார்த்தைகளால் தட்டிக்கழித்து வருகிறது சீனா. படைப்பலப் பெருக்கில் நமது நாட்டுக்கு எப்பொழுதும் நம்பிக்கை இருந்ததில்லை. ஆனால் நாமும் படைபலத்தையும் பெருக்க ஒரு அவசியமும் இப்பொழுது ஏற்பட்டுவிட்டது.

நம் மக்களின் சுதந்திர உணர்ச்சிக்கு ஒரு பெரிய சோதனைக் காலம் இது. அதில் நாம் வெற்றி கண்டுவிட்டோம். கட்சிக் கொள்கைகளை, வேறுபாடுகள், பல இருந்தும் அவற்றையெல்லாம் மறந்துவிட்டு எல்லோருமாக ஒருமுகமாக ஒன்று திரண்டு தீமையை எதிர்த்து நிற்கிறோம். இதைக்கண்டு உலகம் வியந்து பேசுகிறது. முன்னிருந்ததைவிட நம்நாட்டு மக்களின் உணர்ச்சிக்கு இப்பொழுது நல்லதொரு மதிப்பை உலக அரங்கில் இது உண்டுபண்ணிவிட்டது.

இப்பொழுது நமது படைப் பெருக்கத்துக்கும், ஆக்க வேலைகளுக்கும் திரண்ட நிதி தேவைப்படுகிறது. மக்களின் ஆதரவால்தான் இதைத் திரட்டி உருவாக்க இயலும். அதற்கு நம் மக்கள் மனம், மொழி, மெய்களால் உதவவேண்டும். நமது பாரதத்தாயின் பெருமையைக் காக்கவேண்டும். இதை உணர்ந்து எல்லோரும் தாமாகவே பொன்னும், பொருளும் ஆள்பலமும் உடல் உழைப்பும் வாரிவாரி வழங்கி வருகிறோம். நமது ஆதீனம் அதனால் இயன்ற அளவுக்கு உதவி வருகிறது. இந்த ஒற்றுமையை நம்மைத் தாக்க வந்தவனும் எதிர்பார்க்கவில்லை. சமாதான காலத்தில் நிலவிவந்த பல கொள்கைகள் கட்சி வேறுபாடுகளைக்கண்டு ஏமாந்தான்.

இப்பொழுது நமது நாட்டுப்பற்றுக்கு மட்டும் சோதனை வந்திருக்கிறது என்று சொல்வதற்கில்லை. நமது சமயப்பற்றுக்கும் வந்திருப்பதாகக் கொள்ளவேண்டும். இதிலும் நாம் வெற்றி கண்டுவிட்டோம். நமக்குச் சுதந்திரம் கிடைத்தது வெறும் உடல்பலத்தால் அல்ல. பிரார்த்தனையாலும் ஆயிரமாயிரமாக மக்கள் கூடிச் செய்த நாம ஜப பஜனை கோஷத்தாலும்

தான். சுதந்திரப்போரை ஒன்றித்து நடத்திய காந்தி அடிகள் கண்டு காட்டிய சத்தியசோதனை, ஆன்ம சோதனைகளும் பக்தி நெறிக் கொள்கைகளுமே நமக்கு உறுதுணையாக நின்றன. உலக வல்லரசு ஒன்றின் சக்தியையே அது அசைத்துவிட்டது. ஆன்மபலம் பெருக்கிக் கொள்வதால் எதையும் எளிதில் சாதிக்க முடியும் என்ற புது அரசியல் கொள்கையை உலகுக்கு எடுத்துக் காட்டிய பெருமை நமது பாரதத்துக்குத்தான் உண்டு. அதை ஒரு புது அரசியல் தத்துவமாக இப்பொழுது உலகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அரசியல் கொள்கைகளில் ஒரு புரட்சியை உண்டுபண்ணிவிட்டது.

காந்தி அடிகள் மறைந்தபின்னும் அந்தவழியில் நாம் நம் நாட்டைக் காத்து வருகிறோம் என்பதை இப்பொழுது வந்த எல்லைச் சண்டையிலும் நாம் மெய்ப்பித்துவிட்டோம். எல்லைச் சண்டை தொடங்கியிருக்கிறதென்ற செய்தி நாட்டில் தெரிய வந்ததும் நம் சமயத் தலைவர்களும், மக்களும் தேவாலயங்களும் இறைவனை நோக்கிப் பிரார்த்தனைகளும், அர்ச்சனைகளும், யாக யக்ஞங்களும் செய்து வேண்டினார்கள். "ஈசன் பலகீனன் என்றக் கால் ஆலயத்தில் மோசம் வந்ததென்று மொழியலாம்" என்று இவ்வாதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நமக்குத் தேறுதல் கூறியிருக்கிறார்கள்.

"காவாய் கனகத் திரளே போற்றி,
கயிலைமலையானே போற்றி போற்றி"

என்ற அப்பர் அருள்மொழிகளில் வேண்டினோம். உலகில் ஒரு அற்புதம் நேர்ந்தது. பெரிய படைபலத்துடன் வேகமாகத் தங்குதடையின்றி முன்னேறிவந்த எதிரி எதிர்பாராவிதமாக பின்னடையத் தொடங்கினான். நமது ஆன்மபலம் படைபலத்தை வென்றது. காரணமே இல்லாது சண்டைக்கு வந்த அவன் காரணமே இல்லாது திரும்பிப்போனான். நம் படை வீரர்களைப் பிடித்துச்சென்ற அவன் காரணம் ஏதும் கூறாமலே திரும்ப அனுப்பி வருகிறான். இதற்கெல்லாம் யார் எந்தக் காரணத்தை வேண்டுமானாலும் கூறட்டும். இது நமது பிரார்த்தனையின் வெற்றி; நமது நேர்மையின் வெற்றி என்றுதான் சொல்ல வேண்டும். வெற்றி கண்டு வந்தவன் காரணம எதுவுமில்லாமல் தானாகப் பின்வாங்கிச் சென்றது நமது இறையருளால் நிகழ்ந்தது என்றுதான் முடிவு செய்துகொள்ளவேண்டும். அந்த அன்பு நெறியை மேலும் பெருக்கி வாழ்வோமாக. இறையருள் உலகுக்கு வழிகாட்டுமாக.

ஆழ்க தீயதெல்லாம், அரன் நாமமே சூழ்க, வையகமும் துயர் தீர்கவே.

# சிவஞானபோதச் சிற்றுரை

## இலக்கணக் குறிப்பு — விளக்கம்

சைவசித்தாந்தவித்தகர். வித்துவான்.
திரு. வை. சுந்தரேச வாண்டையார்

### மங்கல வாழ்த்து

"அருளிய என்பது செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம். அது புனைவரென்னும் பிறவினை முதல்வினை கொண்டது"— என்றார், சிற்றுரை ஆசிரியராகிய மாதவச் சிவஞான சுவாமிகள்.

**இதற்கு விளக்கம் :-**

அருளிய என்பது (வில்லார் புதல்வராகப்) பெற்ற என்னும் பொருள் தருமாதலின் அது பெயரெச்சமாகும். அவ்வாறுகாமல் அருளிய - அருள; அருள் செய்யும் பொருட்டு என்னும் பொருள் கொள்ளவேண்டும். ஆதலின் அது வினையெச்சம் என்க.

வினையெச்சம் தன்கருத்தா வினையையே கொள்வனவும், பிற கருத்தா வினையையே கொண்டுமுடிவனவும் என்னும் இருவகைய.

உதாரணம் - உண்டு மகிழ்ந்தான். தன் கருத்தா.

உண்ணப்பரிமாறினன். பிறகருத்தா. இவற்றுள் வில்லார் (அருளிய) அருளும் பொருட்டு நல்லார் பொல்லாப் பிள்ளையாரின் இணை மலர் புனைவர் என்ற கருத்தாம்.

இல்லார் - இல்லையாகச் செய்தாரெனப் பண்படியிற் பிறந்த வினைப்பெயர் என்றார்.

**இதற்கு விளக்கம் :**

மலைவு இல்லார் என்றால் முன்பு ஒருகால் மலைவு இருந்து இப்போது இல்லாதவரோ? அன்றி இதுபோது மலைவு இல்லாராயினும் இனியொருகாலை மலைவு உடையவராவரோ எனவும்

பொருள் கொள்ள இடந்தருவதாகலின் அதில் ஒரு சிறப்புக் கருத்தின்மையானும், தம்மையடைந்தவர்க்கு மலைவு இல்லையாகச் செய்பவர் எனச் சிறப்புக் கருத்துண்மையானும் அப்பொருள் கூறப்பட்டது. "நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக் குற்றமு மாங்கேதரும்" என்னுங் குறளில் பொன்றி என்னுஞ் சொல் பொன்றுவித்து என்னும் பொருள் தரல்போல, இல்லையாந் தன்மையை செய்விப்பவர். இது ஒரு குறிப்புவினையாலணையும் பெயர். குறிப்புவினை பொருள் முதலாறினும் பிறக்க வேண்டு மென்பது இலக்கண விதி. ஆதலின் இது அவ்வாறனுள் இன்மை என்னும் பண்படியாகப் பிறந்தது.

## முதற் சூத்திரம்.

"ஏகாரம் இயைபின்மை நீக்குதற்கும், பிறிதினியைபு நீக்குதற்கும் பொதுவாய் நின்ற பிரிநிலை" என்றார்.

இதற்கு விளக்கம் :-

தோற்றியதிதியேஎன உலகின்மேல்வைத்துக்கூறினர். கூறினரேனும் அரனே உலகத்தைத் தோற்றுவிப்பன் என்பது கருத்து

அரனே தோற்றுவிப்பன் என்றால் பிற தேவர்களினின்றும் பிரித்து உணர்த்தலின் பிரிநிலை ஏகாரம். (அவருள் இவனே செல்வன் என்புழிப்போல)

தன்னேடியையின்மை நீக்கல் — வெண்திங்கள்.


பிறிதின் இயைபு நீக்கல் — வெண்தாமரை

(முதலது இனம் இல்லது; பின்னது இனம் உள்ளது)

நிவர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதகலை என்னும் ஐந்து கலைக்குள் அடங்கியது இப்பிரபஞ்சம். இவற்றுட் சாந்தியதீத கலைக்குட்பட்ட புவனத்தை இறைவன் தானே தோற்றி யொடுக்குவன், ஏனைய புவனத்தைச் சீகண்ட ருத்திரர், அனந்ததேவ நாயனர் முதலிய புவன பதிகளையதிட்டித்துத் தோற்றியவருள் ஒடுக்குவன் என்பது சித்தாந்த சாத்திர (த்தத்துவ)க் கொள்கை. (அதிட்டித்தல் - நிலைக்களமாகக் கொண்டு செலுத்துதல்) இறைவனே யனைத்தும் செய்தலின் தன்னேடியை பின்மை யாயிற்று. வெண்டிங்கள் போல்

[ தொடர்ச்சி 429-ஆம் பக்கம் பார்க்க ]

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனம்
ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயில் மகோற்சவத்தில்




ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கல்யாணத் திருக்கோலத்தை
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் தரிசித்தல்


தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழாவில்



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் காவிரித் திருமஞ்சனத்திற்கு எழுந்தருளல்.




ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்கள் பட்டணப்பிரவேசம்



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களும்,
திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குன்றக்குடி மகாசந்நிதானம் அவர்களும்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான,
மாயூரம் குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தில்



தருமையாதீன ஸ்தாபகர்
ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தபரமாசாரியசுவாமிகள்
குருபூஜை விழாவில்



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
கொலுக்காட்சியினபோது இலஞ்சி. திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை
அவர்களும், மதுரை. சிவஸ்ரீ, ம. க. சுந்தரேச பட்டர் அவர்களும்

# சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,

வித்துவான். திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.

('மலர் 22, இதழ் 7, பக்கம் 356 இன் தொடர்ச்சி )

மாணாக்கன் : 'தடத்தம் பலவகை நிலைகளை உடையது' என அருளிச்செய்தீர்கள்; அந்நிலைகளுள் சிலவற்றையேனும் தெரிவித்தருளல் வேண்டும்.

ஆசிரியர் : 'தடத்த நிலைகள் அனைத்தும் சிவத்தினது சத்தியினால் ஆவனவே' எனக் குறித்தோம். சொரூப நிலையில் பதி, 'பரசிவம்' என நிற்குங்கால், அதன் சத்தி, 'பராசத்தி' எனப்படும். அஃது உயிர்களின் அறிவை விளக்கியே நிற்கும் அறிவு வடிவமானது. அந்த அறிவே சத்தியின் சொரூபம்.

பதி உலகத்தை நோக்குங்கால், மேற்குறித்த பராசத்தியில் ஒரு சிறு கூறு உலகத்தைத் தொழிற்படுத்த முற்படும்; அதற்கு, 'ஆதிசத்தி' என்பது பெயர். இது, சிவம் தோன்றாது உலகமே தோன்றுமாறு பிறப்பு இறப்புக்களிற் செலுத்தி நிற்ற லால், 'திரோதான சத்தி' என்னும் பெயரையும் உடையது. திரோதானம் - மறைப்பது.

திரோதான சத்தி, 'உலகத்தைத் தொழிற்படுத்த வேண்டும்' என இச்சித்தும், அதற்குரிய வழிகளை அறிந்தும், அவ்வழியே தொழிற்படுத்தியும் நிற்றலால், அந்நிலைகளில் அது முறையே, 'இச்சா சத்தி, ஞான சத்தி, கிரியா சத்தி' என மூன்றாகி நிற்கும். 'பராசத்தி, ஆதி சத்தி, இச்சா சத்தி, ஞானசத்தி, கிரியா சத்தி' இவையே பஞ்ச சத்திகள் என்க.

இனி, இச்சா சத்தி எப்பொழுதும் செயற்பாட்டுக்குத் துணையாய் நிற்கும். மற்றைய இரண்டு சத்திகளில் ஒவ்வொன்றும் தனித்தனியும், ஒத்தும், ஏறிக் குறைந்தும் தொழிற்படும். அதனால், தடத்த நிலைகள் பெரும்பான்மையாக ஐந்து வகைப் படும். அவற்றைப் பின்வருமாறு அறிக.

ஞான சத்தி மாத்திரம் தொழிற்படும் நிலையில் பதி, 'சிவம்' என நிற்கும்; கிரியா சத்தி மாத்திரம் தொழிற்படும் நிலையில்

பதி, 'சத்தி' என நிற்கும்; இரண்டும் ஒப்பத் தொழிற்படும் நிலையில் பதி 'சதாசிவம்' என நிற்கும். ஞான சத்தி குறைந்து நிற்க, கிரியாசத்தி மிக்குத் தொழிற்படும் நிலையில் பதி, 'மகேசுரன்' என நிற்கும். கிரியாசத்தி குறைந்து நிற்க, ஞான சத்தி மிக்குத் தொழிற்படும் நிலையில் பதி, 'வித்தை' என நிற்கும்.

சிவமும் சத்தியும் அருவத் திருமேனி; சதாசிவம் அருவுருவத் திருமேனி; மகேசுரன், வித்தை உருவத் திருமேனி. சிவம் சத்தி இரண்டும் இலய நிலை; சதாசிவம் போக நிலை; மகேசுரம், வித்தை இரண்டும் அதிகார நிலை. வித்தைக்குக் கீழ், 'உருத்திரன், மால், அயன்' என்ற நிலைகள் உள்ளன. அந்த மூன்றோடு 'மகேசுரன், சதாசிவன்' என்பவைகள் சேர, 'அயன், மால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன்' என, ஒருவனே ஐவராய் நின்று, முறையே, 'படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்' என்னும் ஐந்து தொழில்களை உயிர்களின் பொருட்டுச் செய்வன். இவ்வைந்து தொழில்களும் வடமொழியில், முறையே, 'சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம்' என்னும் பஞ்ச கிருத்தியங்களாகச் சொல்லப்படும், இந்நிலைகளைச் சைவாகமங்கள் சில இடங்களில் ஒவ்வொரு கருத்துப் பற்றிக் கூட்டியும், குறைத்தும் சொல்லும். எனவே, சொரூப நிலையில் தனக்கென்று இறைவன் ஓர் உருவும் தொழிலும் பெயரும் இல்லாதவனாயினும், தடத்த நிலையில் உயிர்களின் பொருட்டுப் பலப்பல உருவும் தொழிலும் பெயரும் உடையவனாவன். இதனையே மணிவாசகப்பெருமான்,

"ஒருநாமம் ஓருருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ"

என்று அருளிச்செய்தார். இவை தடத்தநிலை என்பதே பற்றி இவை கற்பனையாகாமை யறிக.

இங்ஙனம், பதியின் தன்னியல்பு பொது வியல்புகளை ஒருவாறு உணர்க.

## உயிர்களின் தன்னியல்பு

மாணுக்கன்: இனி, உயிர்களின் தன்னியல்பு பொது வியல்புகளை உணர்த்தியருளுதல் வேண்டும்.

ஆசிரியர்: பதியைப்போலப் பசுவாகிய உயிரும் அறிவுடைப் பொருளே; அதனுல், அதற்கும் இச்சையும். செயலும்

உண்டு. ஆகவே, பதி, 'இச்சை, ஞானம், கிரியை' என்னும் ஆற்றல்களை (சத்திகளை) உடையதாதல்போல, பசுவும், 'இச்சை, ஞானம், கிரியை' என்னும் ஆற்றல்களை உடையதே. அதனால், இச்சாஞானக் கிரியைகளை உடைத்தாதல், பதிக்கும் பசுவுக்கும் அளவை முறையில் அமைந்த பொது இயல்புகளாம். ஆயினும், பிறிதொன்றன் வழிப்படாது தன்வழிப்பட்டே நிற்கும் சுதந்திரத்துவம் பதிக்கும், தன்வழி நில்லாது பிறிதொன்றன் வழிப்பட்டே நிற்கும் பரதந்திரத்துவம் பசுவுக்கும் அளவை முறையிற் சொல்லப்படும் சிறப்பியல்புகளாய் உள்ளன. தன்வழி நில்லாது பிறிதொன்றன் வழிப்பட்டு நிற்கும் தன்மையே 'சார்ந்ததன் வண்ணமாதல்' எனப்படுகின்றது.

இனி, பசு, பதியைப்போல ஒன்ருகாது பலவாய் இருத்தலின், சார்ந்ததன் வண்ணமாதல் எல்லா உயிர்கட்கும் பொதுவாய் நிற்ப, அறிவு பல் வேறு வகையாய் அமைந்த சிறப்பியல்பும் உயிர்தோறும் உளது எனக்கொள்க. இங்ஙனம் கொள்ள வேண்டுவது என்னை எனின், இலக்கணம் ஒன்றேயாயின், இலக்கியமும் ஒன்ருகவேண்டுமே யன்றிப் பலவாதல் கூடாமையின் என்க. பசு இங்ஙனம் சார்ந்ததன் வண்ணமாதற்கு, அது பதியைப்போல நுண்பொருளாய் (சூக்குமப் பொருளாய்) இல்லாமல், பருப்பொருளாய் (தூலப் பொருளாய்) இருத்தலே காரணம் என்க. எனவே, சூக்குமத் தன்மை பதிக்கும், தூலத் தன்மை பசுவுக்கும் உரிய சிறப்பியல்பாதல் காண்க.

இன்னும், சுதந்திரத்துவம் இல்லாமையால் உயிரினது அறிவு, தானே விளங்கமாட்டாது, எஞ்ஞான்றும் விளக்குவதொரு பொருளின் துணைகொண்டே விளங்குதலும் உயிருக்கு உரிய சிறப்பியல்பாய் உள்ளது.

'பரதந்திரத்துவம், தூலத் தன்மை, விளக்க விளங்குதல்' என்னும் தன்மைகளால், நிலைபேறுடையதும் இன்பமே வடிவானதும் ஆகிய பொருளைச் சார்ந்து நின்று நிலைபெற்ற இன்பத்தில் திளைத்திருத்தலே உயிருக்கு, 'தன்னியல்பு' எனப்படும் சொரூப இலக்கணமாகும். நிலைபேறுடைய இன்பமே வடிவான பொருள் பதியாகிய சிவமே, அதனால், சிவத்தைச் சார்ந்து சிவமேயாய் நிற்கும் நிலையே பசுவெனப்படும் உயிருக்குத் தன்னியல்பு ஆகும். ஆயினும், பசு என்று உண்டோ அன்றே அதனை ஆணவமலமாகிய பாசம் செம்பிற் களிம்புபோல அநாதியே பற்றி, அதன் அறிவு இச்சை செயல்களைத் தடுத்து நிற்றலால் பசு அநாதியே தன்னியல்பை இழந்து

இன்பத்தைப் பெருது துன்பத்தை நுகரும் பந்தமாகிய பொது வியல்பை அடைந்துள்ளது. ஆணவமலம் பசுவாகிய ஆன்மா விற்குத் தன்னியல்பன்றிப் பொது வியல்பேயாகையால், அஃது ஒருகாலத்து நீங்க, ஆன்மா, சிவத்தைச் சார்ந்து இன்புறுத லாகிய தன்னியல்பை அடையும்.

## பசுவின் போதுவியல்பு

மாணுக்கன்: பதியும் பசுவும்போல அநாதிப் பொருளாகிய ஆணவ மலம், பதியைப் பற்ருது பசுவைமட்டும் பற்றியது ஏன்?

ஆசிரியர்: மேற்கூறியவாறு பதி சூக்குமப் பொருளாயும், பசு தூலப் பொருளாயும் இருத்தலே, ஆணவமலம் பதியைப் பற்ருமைக்கும், பசுவைப் பற்றியதற்கும் காரணமாகும்.

மாணுக்கன்; இவ்வாணவத்தின் சார்பினுல் உயிர்கட்கு விளையும் விளைவுகள் யாவை?

ஆசிரியர்: உயிர்கள் அடையும் துன்பங்கள் அனைத்தும் ஆணவச் சார்பின் விளைவேயாகும்.

முதற்கண் எங்கும் எல்லாவற்றையும் அறியும் தன்மைத் தாகிய உயிரினது அறிவை ஒன்றையும் அறியவொட்டாது அடியோடு மறைத்து, இருள் மயமாக்கி, இருட்டறையில் அகப்பட்ட கண்ணில்லாக் குழவியைப்போலப் பேரிடருக்கு உள்ளாக்கியது ஆணவமலம்.

உயிருக்கு உள்ள இத்துன்பத்தினை அறிந்து இரங்கிய இறைவன், அவ்வாணவ இருளைப் போக்குதற்கு விளக்குப்போல மாயையினின்றும் உடம்பு முதலியவற்றை அவற்றின் கன்மத் திற்கு ஈடாகப் படைத்துக் கொடுக்க, அவைகளைப் பெற்று, பிறப்பு இறப்புக்களில் அகப்பட்டு, மேல் கீழ் நடு உலகங்களில் சென்று இன்பம், துன்பம், மயக்கம் இவைகளை நுகர்ந்தும், நினைப்பு மறப்புக்களை அடைந்தும் வரும் இன்னல்கள் எல்லாம் ஆணவமலச் சார்பினுல் உண்டாயினவே.

நினைப்பு மறப்புக்கள் ஐந்து நிலைகளாகக் கூறப்படும்; அவை, 'சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்' என்பன. இவை முறையே நனவும், கனவும், உறக்கமும், பேருறக்கமும், உயிர்ப்படங்கலும் ஆகும். இந்நிலைகள், 'அவத்தை' எனப்படும்.

மும்மலச் சார்பினுல் பிறப் பிறப்புக்களை எய்தி, அஞ்சவத்தை உறுதலே பசுவின் பொதுவியல்பாகிய' தடத்த இலக்கண மாகும்.

(தொடரும்)

# தொல்காப்பியச் சொல்லதிகார - - - விளக்கக் கட்டுரைகள்.

பண்டித வித்துவான், திரு. கு. சுந்தரமூர்த்தி

( மலர் 22, இதழ் 6, பக்கம் 308 இன் தொடர்ச்சி )

## மூன்றும் வேற்றுமை :

இதன் உருபு ‘ஒடு’ என்பதாகும். சேனவரையர் கருத்தின் படி ‘ஆன்’ என்பதும் இதற்கு உருபாம். இது வினைமுதலும், கருவியுமாகிய இரு பொருளை உடையது. வினை முதலாவது கருவி முதலாகிய காரணங்களைச் செயல் படுத்துவதாகும். கருவி யாவது வினைமுதலின் தொழிற்பயனை செயப்படுபொருளிலே செலுத்துவதாகும். (12)

இது ஒன்றால் ஒன்று பண்ணப்படுதல் என்னும் பொருளி லும், ஒன்றனுல் ஒன்று தகுதல் என்னும் பொருளிலும், ஒன்றனுல் ஒன்று தொழிற்படுதல் என்னும் பொருளிலும், ஒன்றனுல் ஒன்று ஆதல் என்னும் பொருளிலும், ஒன்றனுல் ஒன்றைக் கொள்ளுதல் என்னும் பொருளிலும், ஒன்றனேடு ஒன்று மயங்குதல் என்னும் பொருளிலும், ஒன்றனேடு ஒன்று இயைந்த வினையாகல் என்னும் பொருளிலும், ஒன்றனேடு ஒன்று இயைந்த ஒப்பல்லாத ஒப்பினை யுரைத்தல் என்னும் பொருளிலும், ‘இன்’ னும் ‘ஆனு’ம் ஏது வாக வரும் பொருளிலும் வரும்

## நான்காம் வேற்றுமை :

இதன் உருபு ‘கு’ என்பதாகும். இது கோடற் பொருளில் வரும். (14)

இது ஒன்றற்கு ஒன்று பயன்படுதல், ஒன்றற்கு ஒரு பொருளை இனிக் கொடுப்பதாக உடன்படுதல், ஒன்றற்கு உரிமையுடையவாய பொதுவாகிய பொருளைக் கூறு இடப் படுதல், ஒன்று ஒன்றாகத் திரிந்து வரும் பொருளாதல், ஒன் றற்கு ஒன்று பொருத்தமுடைத்தாதல், ஒரு பொருளினை இனிப்

பெறுதல் காரணமாக ஒரு தொழில் நிகழ்தல், ஒன்றற்கு ஒன்று நட்பாதல், ஒன்றற்கு ஒன்று பகையாதல், ஒன்றற்கு ஒன்று காதல் உடைத்தாதல், ஒன்றற்கு ஒன்று சிறத்தல் என்று சொல்லப்பட்ட பொருள்களில் வரும்.

ஐந்தாம் வேற்றுமை:

இதன் உருபு 'இன்' என்பதாகும். இது இப்பொருளை நோக்க இப்பொருள் இத்தன்மைத்தாக இருக்கும் என்னும் பொருளில் வரும். இப்பொருள் நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என நான்கு வகைப்படும்.

(அ) நீங்கற் பொருட்குத் தீர்தல், பற்றுவீடுதல் என்ற இரண்டும் உரியனவாக வரும்.

(ஆ) ஒப்புப் பொருள் (பொருவு) ஒன்றை யொன்று உவமித்தலாகிய உவமப் பொருளிலும், ஒன்றைக் காட்டிலும் ஒன்று உயர்ந்தோ தாழ்ந்தோ வரும் உறழ் பொருளிலும் வரும்.

(இ) எல்லைப் பொருட்கும், மேற்கூறிய ஒப்புப் பொருட்கும். இப்பொருளினும் இப்பொருள் இத்தன்மைத்து என்னும் பொருளில் பயன்படுத்தப்படும் வண்ணம், வடிவு, அளவு, சுவை, தண்மை, வெம்மை, நன்மை, தீமை, சிறுமை, பெருமை, வன்மை மென்மை, கடுமை, இளமை, சிறத்தல், இழித்தல், புதுமை, பழமை, இன்மை, உடைமை, நாற்றம், பன்மை, சின்மை என்னும் இருபத்து நான்கு வாய்பாடுகளும் உரியவாக வரும்.

(ஈ) ஏதுப்பொருள் ஞாபக ஏதுவும், காரக ஏதுவும் என இருவகைப்படும். இவற்றுள் ஞாபகஏது 'இன் ஆன் ஏது, என மூன்றும் வேற்றுமையில் கூறப்பட்டது. ஈண்டுக் கூறப்படும் காரக ஏதுவிற்கு அச்சம், ஆக்கம் என்னும் இரண்டும் உரியனவாக வரும் (17).

ஆறும் வேற்றுமை :

இதன் உருபு 'அது' என்பதாகும். சேனவரையர் கருத்தின்படி அகரமும் உருபாம். இது தன்னேடு ஒற்றுமையுடைய பொருளாகிய தற்கிழமைப் பொருளிலும், தன்னின் வேறும் பொருளாகிய பிறிதின் கிழமைப் பொருளிலும் வரும். (18).

தற்கிழமை ஒன்றுபல குழீஇயது, வேறுபல குழீஇயது, ஒன்றியற் கிழமை. உறுப்பின் கிழமை, மெய்திரிந்தாய கிழமை என ஐந்து வகைப்படும். பிறிதின் கிழமை பொருளின் கிழமை. நிலத்தின் கிழமை, காலத்தின் கிழமை என மூவகைப்படும். அவற்றிற்கு உரிய வாய்பாடுகள் வருமாறு :-

## தற்கிழமை —5.

1. ஒன்றுபல குழீஇயது — குழூஉ
2. வேறுபல குழீஇயது — குழூஉ
3. ஒன்றியற் கிழமை — இயற்கை, நிலை
4. உறுப்பின் கிழமை — உறுப்பு
5. மெய்திரிந்தாய கிழமை — செயற்கை, முதுமை, வினை.

## பிறிதின் கிழமை —3.

1. பொருளின் கிழமை — உடைமை, முறைமை, கருவி, துணை, கலம், முதல், தெரிந்து மொழிச்செய்தி (செய்யுட் கிழமை),
2. நிலத்தின் கிழமை — கிழமைக்கிழமை, வாழ்ச்சிக் கிழமை
3. காலத்தின் கிழமை — கிழமைக்கிழமை. (19)

ஏழாம் வேற்றுமை :

இதன் உருபு கண் என்பதாகும். இது தொழில் நிகழ்கின்ற இடம், நிலமாகிய இடம் காலமாகிய இடம் ஆகிய மூவகைப் பொருளிலும் வரும். (20)

இவ்விடப் பொருள்பற்றி வரும் பிற சொற்களாவன: கண், கால், புறம், அகம், உள், உழை, கீழ், மேல், பின், சார், அயல், புடை, தேவகை, முன், இடை, கடை, தலை, வலம், இடம் என்பன.

"கண்கால் கடையிடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலமிட மேல்கீழ் புடைமுதல்
பின்பா டளைதே முழைவழி யுழியுளி
உள்ளகம் புறமில் லிடப்பொரு ளுருபே." (பெயர்: 45)

என நன்னூலார் இவற்றை உருபு எனக் கூறுமாறு காண்க.

இவற்றை உருபு எனவே இளம் பூரணர் கூறுவர். சேனாவரையர் இக்கருத்தினை மறுப்பர். அம்மறுப்பு வருமாறு :-

1. இங்குக் கூறப்பட்ட கண் முதலாயின வெல்லாம் உருபாயின் " ஏழாகுவதே, கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி " என்னுமிடத்து கண் என்பதைக் கூற வேண்டாம். அன்றி ஈரிடத்தும் கூறினரெனின் கூறியது கூறல் என்னும் குற்றம் தங்கும். (2) பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபு ஏற்கும் போது சாரியை பெற்றால், பெயர் முன்னும் சாரியை அடுத்தும் உருபு இறுதியிலும் வருதலே முறை. ஆயின் ஊர்ப் புறத்திருந்தான் என்றவிடத்தோ ஊர் என்ற பெயர் முன்னும், புறம் என்ற உருபு அடுத்தும், அத்து என்னும் சாரியை இறுதி யிலும் வருகிறது. இங்ஙனம் உருபின் பின்னர் சாரியை வருதல் முறையன்றாகலின் கண் முதலாயின வெல்லாம் உருபு அன்று என்பர்.

யான், தாம் என்னும் சொற்கள் உருபேற்கும் பொழுது முறையே என் எனவும், தம் எனவும் திரியும். இங்குக் கூறப் பட்டிருக்கும் உழை, முன் போன்ற சொற்களை ஏற்கும் பொழுதும் என்னுழை என்றும் தம்முன் என்றும் யான், தாம் என்பன திரிந்துவருதலின் இவையும் உருபே எனின்; அந்நிலை மொழிகள் உருபுகளே யன்றி உருபின் பொருள்பட வரும் பிறசொற்கள் வருவழியும் 'அதற் பொருட்டாகலின்' என்றும், 'தம்முடைய தண்ணளியும்' என்றும் திரிந்து வருதலின் அத்திரிபு உருபிற்கே அன்று என்பது பெறப்படும்.

'நச்சினார்க்கினியர்' இக்கருத்தினை மறுத்து இவை யெல்லாம் உருபுகளென்றே கூறுவர். 'தெய்வச்சிலையாரோ, " இவை யெல்லாம் பெயரைச் சார்ந்து தனித்தனி வரில் பெயராகி உருபேற்கும்; பெயரைச் சாராது இடமும் காலமும் ஆகிய பொதுமை உணரவரினும், உருபு மாத்திரமாகி நிற்கும்; இடம் வேறுபாடு உணரவரின் உருபு புலப்படாது பொருள் உணர வரும் " என்பர். (21)

வேற்றுமைத் தொகை விரியுங்கால் படும் இயல்பு: அன் மொழித்தொகை விரியுங்கால் அதன் இறுதிக்கண் சொற்கள் விரிதல் போல வேற்றுமைத் தொகையை விரிக்கின்ற பொழுதும் அங்ஙனம் சில சொற்கள் இறுதியில் நின்று விரியும். இங்ஙனமே சேனாவரையரும் நச்சினார்க்கினியரும், சிறிது வேறுபட இளம் பூரணரும் கூறியிருப்பினும், சிவஞான முனிவர் இவற்றை மறுத்து வேறு உரை கூறுவர். இதுகாறும் கூறப்பட்ட வேற்றுமை களுக்குக் கூறிய பொருட் பாகுபாட்டுச் சொற்களே யன்றி பிற சொற்கள் வருமாயினும் ஏற்றுக்கொள்க என்பதைப் பொருளாக உணர்த்தி இதனைப் புறனடையாகவும் கொள்வர். இதுவே பொருந்துவதாகும்.

[தொடரும்]

# சஹஸ்ராகமம்

சிவாகம வித்துவான்

திரு. S. சுவாமிநாத சிவாசாரியார்

( மலர் 22, இதழ் 7, பக்கம் 362 இன் தொடர்ச்சி )

शालिभिस्तेन मानेन तण्डुलै रुडुसन्निभैः ।
दशभारैश्च संपूर्य चोत्तमं परिकीर्त्तितम् ॥ 199

अष्टत्रिंशैश्च द्रोणैश्च मध्यमं परिकीर्त्तितम् ।
अधमं त्रिंशति द्रोणैः कर्तव्यं देशिकेनतु ॥ 200

இவ்வாறு கணக்கின்படி பத்து பாரம் நெல்லைப்போட்டு அதன்மேல் நக்ஷத்திரம்போன்ற அரிசியைப்போட்டு ஸ்தண்டிலம் அமைக்கவேண்டும். பத்து பாரம் நெற்போடுவது உத்தம பக்ஷம். முப்பத்தெட்டு த்ரோணம் நெல் போடுவது மத்திம பக்ஷம். முப்பது த்ரோணம் நெல் போடுவது அதமபக்ஷமாகும்,

शाल्यर्धं तण्डुलं प्रोक्तं तण्डुलार्धं तिलं तथा ।
तिलार्धं लाजमेवंतु सप्तधान्यं शिवत्रयम् ॥ 201

ஸ்தண்டிலத்தில் போடப்படும் நெல்லின் பாதியளவு அரிசியும், அவ்வரிசியின் பாதியளவு எள்ளும், அவ்வெள்ளின் பாதி அளவு பொரியும் இருக்கவேண்டும். மற்றைய ஏழு தான்யங்கள் வகைக்கு மூன்று மரக்கால் இருக்கவேண்டும்.

आढकं मुद्ग माषौ च गोधि सर्षप एव च ।
चण निष्पावकं चैवं सप्तधान्यैः प्रपूरयेत् ॥ 202

மொச்சை, பயறு, உளுந்து, கோதுமை, கடுகு, கடலை, காராமணி என்ற இந்த ஏழு தான்யங்களையும் போட்டு நிரப்ப

வேண்டும். "தான்யம் சப்த்தகமாசனம் மகவிதௌ" என்ற சித்தாந்த சாராவளியின் வாக்கியப்படி இந்த ஏழு தான்யங்களும் இறைவனுக்கு உட்காரும் ஆசனமாகும்.

तन्मध्ये पद्ममालिख्य साष्टपत्रं सकर्णिकम् ।
द्वारादि परिवाराणां द्रोणं द्रोणं प्रकीर्त्तितम् ॥ 203

तण्डुलं तु तिलं चैव तस्यार्धार्धं प्रकल्पयेत् ।

இவ்வாறு போடப்பட்ட தான்யத்தின்மேல் எட்டு இதழை உடைய கமலம் வரையவேண்டும். த்வார தேவர் முதலிய பரிவார மூர்த்திகளுக்கு ஸ்னபனம் வைக்கவேண்டிய இடத்தில் நெல் இரண்டு மரக்காலும் அதில் பாதி அரிசியும் போட வேண்டும் என்று கூறப்படுகிறது.

द्रोणद्वयघटं शंभोस्स्वर्णेनैवतु कारयेत् ॥ 204

सुदृढं रजतेनैव द्रोणपूर्णंतु वर्धनी ।
शिवपूर्ण घटानष्टौ ताम्रेणैवतु कारयेत् ॥ 205

आढकेनैव पूर्णास्युः कलशा स्संप्रकीर्त्तिताः ।
कर्त्ता वित्तानुसारेण लक्षणोक्तं प्रकल्पयेत् ॥ 206

இறைவனை ஆவாஹனம் செய்யும்பொருட்டு வைக்கப்படும் குடமானது தங்கத்தினால் செய்ததாக இருக்கவேண்டும். கெட்டியானதாயுமிருக்கவேண்டும். நான்கு மரக்கால் ஜலம் பிடிக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும். இதுபோல் வர்த்தனிகலசத்துக்குரிய குடம் வெள்ளியினால் செய்யப்பட்டதாகயும், இரண்டு மரக்கால் ஜலம் பிடிக்கக்கூடியதாயும் இருக்கவேண்டும். சிவ கும்பத்தைச் சுற்றிலும் வைக்கப்படும் வித்யேசகலசங்கள் எட்டும், தாமரத்தினால் செய்யப்பட்டதாயும் ஒரு மரக்கால் ஜலம் பிடிக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும். மற்றைய கலசங்கள் யாவும் இரண்டு படி ஜலம் பிடிக்குமளவுள்ளதாய் தாமரத்தினாலேயே செய்யப்பட்டதாயும் இருக்கவேண்டும். கர்த்தாவானவர் பொருளுக்குத் தக்கவாறு சிவாகமத்தில் கூறப்பட்ட லக்ஷணப்படி குடங்களைச் செய்யவேண்டும்.

(தொடரும்)

# ஸ்ரீ வனதுர்க்கைத் தசநாமாவளி

வித்துவான், திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை

### விநாயகர் துதி

வான்வாழ்க்கை வையகத்தில் வாழ வழங்குகின்ற
கோன்ஞானக் குஞ்சரத்தைக் கூறு.

### ( எந்த நேரமும் திருவருள் உண்டாக )

அன்னையே ! ஆதிசக்தி ஆளும் வன துர்க்கைப்
பொன்னடியைக் கும்பிட்டுப் போற்றுகின்றேன்-மன்னுபுகழ்ச்
செந்தருமைச் சோலைத் திகழும் மணிவிளக்கே !
சந்ததமும் வாழ்வரம் தா. (1)

### ( அறிவு பெற )

திருநாள் நினைத்தொழும் தேன்நாள் தொழாநாள்
கருநாள் விநாயகரும் காண - ஒருநாளும்
வானோர் மறவாமல் வந்துதொழும் கொற்றவையே
ஞானோ தயமலரை நல்கு. (2)

### ( நோய் நீங்கவும் - பொருள் பெறவும் )

உருவைச் சுடர்வேல் ஒளியை உமையைத்
திருவைத் தினமும் தெளிவார் - அருள்பெற்றுப்
பொல்லாநோய் நீங்கிப் பொருள்பெற்று - வாழ்ந்திடுவர்
இல்லாதார் ஏத்தாதார் இங்கு. (3)

### ( முன்வினை நீங்கவும் - யமபயம் நீங்கவும் )

உள்ளம் கசிய உடல்கசிய ஆனந்தம்
கொள்ள வினைதீர்க்கும் கோமளமே - கள்ளயமன்
சூழும் பொழுதுவரும் சூலி தருமபுரம்
வாழும் வனதுர்க்கை வா. (4)

( தாயின் கருணை )

அண்டம் திருமேனி ஆகாயம் நீண்முடி
கொண்ட உயிரனைத்தின் கோலமே - பண்டு
குருஞான சம்பந்தர் கூறுமுன் பால்தேன்
தரும்பசிக்குத் தந்தவனத் தாய். (5)

மாய உடம்பிது மாயா திருக்கக்
காயம்கொண் டாடும் கணக்கின்றி - நேயமுடன்
கண்ணணவளைக் காண்க கருத்தவள்சீர் எண்ணுக
மண்ணணவளைச் சூழ்க மகிழ்ந்து. (6)

( தாயின் பல வடிவம் )

ஆதி தனிவடிவம் ஆனுள் அடியவற்காய்ச்
சோதி மகவுருவாய்த் தோன்றினுள் - பாதி
இடப்பாகங் கொண்டாள் இளையாள் அரிக்குக்
கடப்பவனம் வாழும் கரும்பு. (7)

( குழையின் சிறப்பு )

மூலப் பழமறைக்கு முன்னேயும் மெய்கண்டார்
சாலத் தமிழ்வேத சாத்திரமும் - ஓலமிடும்
ஆலமமு தாக்கும் அபிராமி பட்டருக்குக்
கோலவிருள் மாற்றும் குழை. (8)

( தாய் விளங்கும் இடம் )

அல்லல் அகற்றி அடியார்க் குபதேசம்
சொல்லும் குருவடிவாய்த் தோன்றினுள் - நல்லவர்
நெஞ்சிலே ஆனந்தம் நின்ற பரவசளாய்க்
கொஞ்சுமே ஞானக் கொழுந்து. (9)

( தொண்டர் பெருமை )

கன்னி திரிசூலி கைலைச் சிவகாமி
அன்னம் அளிக்கும் அழகுடையாள் - முன்னிலையில்
ஒன்ருகி நின்ருள் உணர்வுதந்த உள்ளத்தில்
நன்ருகத் தோன்றுபதம் நாடு. (10)

( வாழ்த்து )

வாழி வனதுர்க்கை வாழி மணிமாலை
வாழிகைலை காண்குருவே வாழியவே - வாழி
தருமபுரச் செங்கோல் தனியரசு ஞானக்
குருபதமே வாழ்கவாழ் க.

# மணிமேகலை

[ இலக்கிய நாடகம் ]

"செஞ்சொற்கொண்டல்"

வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் எம்.ஏ.,

( மலர் 22, இதழ் 7, பக்கம் 368 இன் தொடர்ச்சி )

## காட்சி 4.

இடம்: பூம்புகார்த்திருவீதி

காலம்: மாலை

உறுப்பினர்: உதயகுமரன், அமைச்சர், எட்டிகுமரன்.

வாழ்த்துவோர்: இராசாதி ராச இராச மார்த்தாண்ட இராச கம்பீர சோழசாம்ராஜ்யத்தின் இளவரசர், காலவேகத்தின் மதவெறி தணித்த காவலர் உதயகுமரச் சோழர்; - வாழ்க வாழ்க! வாழ்க வாழ்க!

[ உதயகுமரன் தேர் விரைந்து வந்து நிற்கிறது; உதயகுமரன் தேரினின்றும் குதித்துக் கீழிரங்குகிறான் ]

உதய: அமைச்சரே! அதோ அந்த மாளிகையின் சாளரத்தில், எட்டிகுமரன் ஒருவன், யாழிசைக்காமல், காதலியோடு களிக்காமல், கண்ணீர்சிந்திக் கருத்தழிந்து நிற்கும் காரணம் எதுவாக இருக்கலாம்?

அமைச்: இளவரசே! மக்களின் கண்ணீரைக் கண்டும் கேட்டும் அறியாத சோழவளநாட்டுக்கே இது ஒரு புதுமையான காட்சி!

[ எட்டிகுமரன் ஓடிவந்து வணங்குகிறான் ]

எட்டி: இளவரசே! வணங்குகிறேன். இளவரசர் என்னைத் திருக்கண் சார்த்தியதன் குறிப்பு எதுவோ என மயங்குகிறேன்.

அமைச்: மகரயாழ் வல்ல வணிகரே! கண்ணீர் வார்ந்த உமது நிலைமை......

எட்டி: இளவரசே! நெஞ்சை உலுக்கும் நிகழ்ச்சி ஒன்று. சோழப் பேரரசின் அரசாங்கக் கணிகையாய், தலைக்கோல் பட்டம் பெற்று ஆடலரசியாக விளங்கிய மாதவியின் மணிவயிற்றில் கோவலனுக்குப் பிறந்த பூங்கொடி மணிமேகலை; இயற்கையழகு சோர்ந்து இந்த வழியாக மலர் வனம் போகக்கண்டேன்; அந்தக் கோலத்தை, வாடிய முகமும், சோகம் கூடிய விழிகளும், ஆடிய நடையுமாக அந்தப் புனையா ஓவியம் பூஞ்சோலைக்குச் சென்ற காட்சியை......

உதய: என்ன, மணிமேகலையா? என் இதயக்கோயிலில் மலரிட்டு வணங்கும் காதல் தெய்வம் - அழகின் சிரிப்பு - மணிமேகலையா?

எட்டி: ஆம்; இளவரசே! மணிமேகலையைக் கண்டதும், மதுரைமா நகரிலே அவள் தந்தை, மாசாத்துவானின் மகன் கோவலன் ஆராயாது கொல்லப்பட்ட செய்தி, மதுரைமா நகரிலே அவன் மனைவி கண்ணகிதேவி அலறி அழுது அரசன் திருமுன்பு அவலநிலை சொல்ல ஓடோடிய நிலை, இறுதியாக மதுரையைத் தீக்கிரையாக்கிப் பத்தினித் தெய்வமாகிய பாங்கு - இவற்றை மெல்ல எண்ணிப் பார்த்தேன் இளவரசே! உள்ளம் சோர்ந்தேன்! உணர்விழந்தேன்!

உதய: (சோர்ந்து) ஆம், உண்மைதான்!

எட்டி: என்னையறியாது நான் ஏந்தியிருந்த மகரயாழில் பகை நரம்பில் பட்டன என் விரல்கள்; பண் மயங்கியது; நெஞ்சப் புண் மயங்கியது; எல்லாம் அந்தப் பெண் - மணிமேகலை எழுப்பிய துன்ப நினைவுகள்! இளவரசே! ஒன்று கூறலாமா?...... இளவரசே!

உதய: எட்டிகுமர! பேசு! மேலும் பேசு! என் மனக்கோயிலில் மன்னிய மாதரசி மணிமேகலையைப் பற்றிப் பேசிக்கொண்டேயிரு எட்டி குமர!

[அமைச்சர் போதல்]

எட்டி: கூடத்திலே ஏற்றிவைத்துக் கும்பிடப்பட வேண்டிய விளக்கு குடத்திலே இருந்தால், பயனேது இளவரசே! அழகான மலர்! எழில் பொழியும் புதுமலர்! தலையிலே கண்ணியாகி, மார்பிலே தாராகி, தொடையாகி, அலங்கலாகி அழகு குலுங்க வேண்டிய புது வண்ணப் பூ, செப்புக்குள்ளே சிறைப்பட்டிருந்தால் அதன் சிறப்பு என்னுவது, இளவரசே! மணிமேகலையின் நிலைமையை விளக்க இப்படித்தான் கூறமுடியும்...... ஆம் இளவரசே! இப்படித்தான் கூற முடியும்!

உதய: மலர்வனம் போயிருக்கும் மணிமேகலையை இதோ என் தேரிலேற்றித் திரும்புவேன்! தமிழ் நாட்டின் ஆடற் கலைக்கு ஓர் இமயம், பாடற்கலைக்கு ஓர் விந்தியம் மணிமேகலை சோழப் பேரரசின் அரசமா தேவியாக வேண்டியவள்! அந்தப் புரத்திலே இருக்கவேண்டிய அழகுராணி! பஞ்சணையிலே கொஞ்ச வேண்டிய பஞ்சவர்ணக்கிளி! இதோ... அந்த தேவியின் அழகை என்னிரு கண்களால் அள்ளிப் பருகுறேன்...... ஓடுகிறேன் மலர்வனம்!

(தேரேறுகிருன்)

## காட்சி 5.

இடம்: மலர்வனம்.

காலம்: மாலை.

உறுப்பினர்: மணிமேகலை, சுதமதி, உதயகுமரன்]

சுதமதி: மணிமேகலை! அதோ, பூத்து நிற்கும் புது மலர்கள்! அவற்றைப் பறி! எவ்வளவு அழகாக இருக்கின்றன அவை பார்த்தாயா?

மணி: சுதமதி! சோக கீதமே இல்லை சோலையில்! எங்கும் அழகின் கொலுவிருக்கை! ஆனந்த கீதம்! இல்லையா?

சுத: அந்தப் புருக்கள் ஏன் அப்படி நம்மையே நோக்கு கின்றன, மணிமேகலை!

மணி: அழகான பூக்களைப் பார்த்து ரசிக்காமல் பறித்து ரசிக்கும் பகுத்தறிவற்ற பாவையர்கள் யாராயிருக்கலாம் என்று யோசிக்கின்றனவோ?

சுத: (சிரித்து) சரியான விளக்கம்! ...அதோ ...பார்! மரக்கிளைகளில் மந்திகளின் நடனத்தை!

மணி : வேடிக்கையாக இருக்கிறது சுதமதி ! இதோ...... இந்தப் பொய்கையில்...

சுத : தாமரையில் அரசு வீற்றிருக்கிறது அன்னம் ! கரையிலே நின்று நாட்டியம் ஆடுகிறது மயில் ! கம்புட் சேவல் மத்தளம் கொட்டுகிறது ! பின்னணிப் பாடலே, அதோ... பூங்கொம்பில் நின்று குயில் இசைக்கிறது பார்த்தாயா...?

[ இருவரும் சிரித்தல் ]

மணி : சுதமதி ! சோர்ந்து இருந்த என் நெஞ்சில் மெல்ல மெல்ல மகிழ்ச்சியை உண்டாக்குகிறது இந்த மலர்வனம் !

சுத : மணிமேகலை ! ...பொய்கையிலே மீண்டும் பார் ! தாமரை மலரிற் பிறழ்ந்து வீழும் கயல் மீன்கள் ! பாவம் ! அவற்றை அப்போதும் பெற முடியவில்லையே என்று ஏமாந்து போய், மெல்லப் பறக்கிறது பார் மீன்கொத்திப் பறவை !

[ இருவர் சிரிப்பு ]

மணி : நல்ல காட்சி சுதமதி !

சுத : உன் கண்கள் தாமரைகள் ! அவற்றை மலரென்று கருதி வட்டமிடும் வண்டுகள் கயல்மீன்கள் ! அவற்றை ஓதுக்கும் உனது செங்கரமே சிச்சிலிப் பறவை ! எப்படி ?

மணி : கற்பனைப் பிச்சைக்குக் கவிஞர்களும் உன்னிடம் வரவேண்டும் போலிருக்கிறதே சுதமதி !

[ தேரோசை கேட்கிறது ]

மணி : சுதமதி ! தேரோசை கேட்கிறது... ஒருவேளை... இளவரசன் உதயகுமரர் என்மீது ஆசை கொண்டுள்ளார் என்று என் தாயிடம் வசந்தமாலை கூறக் கேட்டிருக்கிறேன்; இளவரசராக இருக்குமோ ? சுதமதி... என்ன செய்வது இப்போது ?

சுத : கவலைப்படாதே தோழி ! இந்தப் பளிங்கு மண்டபத்திற் புகுந்து தாழிட்டுக் கொண்டுவிடு; நான் பார்த்துக் கொள்கிறேன்;

[ பளிங்கு மண்டபத்தில் மணிமேகலையை இருத்திவிட்டுத் தான் ஐந்துவிற்கிடை தூரத்தில் நின்றுகொள்கிறுள்; உதயகுமாரன் வருகின்றுன். ]

[தொடரும்]

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டில்,



சென்னை மாநில இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார் B. A., B. L., அவர்கள் பிரபந்தத் திருநாளில் தொடக்கவுரையாற்றுதல்.

தருமையாதீனம்
திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டில்



திருவண்ணாமலை ஆதீனம்
குன்றக்குடி மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
பெருங்காப்பியத் திருநாளில் தொடக்கவுரையாற்றுதல்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கல்யாண தரிசனத்திற்குப் பின்னர்



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களும்
திருவண்ணுமலை ஆதீனம் குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும்
சென்னை மாநில செய்தித்துறை அமைச்சர்
கனம். திரு. பூவராகன் அவர்களும்

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீன ஸ்தாபகர்,
ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழாவில்



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
பட்டணப்பிரவேசத்திற்கு சிவிகையில் ஆரோகணித்தல்.

412 ஆம் பக்கத்தொடர்ச்சி

இனி சாந்தி யதீத கலைமட்டும் தானே யொடுக்கித் தோற்று விப்பான். ஏனைய கலைப் புவனங்களைப் பிறர் (சீகண்டருத்திரர் முதலியோர்) தோற்றுவிப்பர் என்று கொண்டால் அது பிறிதினியைபு நீக்கியது; வெண்டாமரைபோல

ஆகலின் இவ்வுலகம் அரனே தோற்றுவிப்பன் என்பது மேற்கூறிய இரண்டற்கும் பொது.

"அவை - தொகுதி. சுட்டுப் பெயரெனக் கொள்ளின் உள வெனப் பிரித்துப் பயனிலையாக்கித் தாமென்பதனை அசை நிலை யாக வைத்துரைத்து ஆக்கச்சொல் வருவித்துரைக்க" - என்றார்.

இதற்கு விளக்கம் :

"அவன் அவள் அது எனும் மூவினைமையின் தோற்றிய திதியே ஒடுங்கி மலத்து உளது ஆம்", என்னும் வாக்கியத்தில், அவை என்றது பன்மைப் பெயர். அது எழுவாய். அதற்கு உளது என்ற ஒருமைப் பயனிலை கோடல் வழுவாகுமன்றோ? அவ்வழுவாராமைக்கு அவையென்ற சொல்லை ஒருமையாகக் கொண்டால்தான் முடியும்.

ஒருமையுள் - தொகுதியொருமை, சாதியொருமை என இருவகை.

தொகுதியொருமை - பலபொருள் சேர்ந்தது.

(உ - ம்) தோப்பு சோலை, படை (collective noun). தோப்பு-செழித்தது ; சோலை-மலர்ந்தது ; படை-புறப்பட்டது என்னும் வழக்கன்றி முறையே செழித்தன, மலர்ந்தன, புறப் பட்டன என்னுமாறில்லை. அவன், அவள், அது என்னும் மூன்றினையும் தொகுத்து அவையென்று குறித்தார். அத் தொகுதியொருமைக்கேற்ப பயனிலை உளது என ஒருமை கூறிய வாறு. அது என்னும் ஒருமைச் சுட்டுப்பெயர்க்குப் பன்மைப் பெயர் அவை என்பது. பன்மை எழுவாயாகவும் கொள்ளலாம். அப்போது உளதாம் என்ற தொடரைப் பிரிக்கையில் (உளது+ ஆம்) எண்ணுது உள - தாம் எனப்பிரித்து அவைதாம் உள எனக் கொள்க.

"அந்தத்தைச் செய்யும் கடவுளை அந்தமென்றது உபசாரம்" - என்றார்.

இதற்கு விளக்கம் :

இயல்பினான் இல்வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லா ந் தலை.

என்னும் திருக்குறளில் தலைமையாவான் என்பதைத் தலையென் பது போல உபசாரம்.

## முதல் அதிகரணம்

"பூதாதி - அன்மொழித்தொகை." என்றார்.

இதற்கு விளக்கம் :

அன்மொழித்தொகை - பூங்கொடி வந்தாள். இங்குப் பூவையுங் குறிக்காமல், கொடியையுங் குறிக்காமல் அது போல் வாள் என அல்லாத (இல்லாத) மொழியை (பெண்ணை)க் குறிப் பது போல.

பூதாதி -

பூதம் - பஞ்சபூதம்

ஆதி - காரணம்.

பூதத்தையும் குறிக்காமல், காரணத்தையும் குறிக்காமல் பிரபஞ்சத்தைக் குறிப்பதால் அன்மொழித்தொகை.

## இரண்டாம் அதிகரணம்

" இவ்வெண்பாவினைச்

" செய்யுட்க ளோசை சிதையுங்கால் ஈரளபும்
ஐயப்பா டின்றி யணையுமாம் - மைதீரோற்
றின்றியுஞ் செய்யுட் கெடினொற்றை யுண்டாக்கு
குன்றுமே லோற்றளபுங் கோள்.

என்பதுபோல இரண்டதிகரணப் பொருள்படுமாறு இரு தொடராக வைத்து உரையாக்காற் பொருளியைபு படாமை யறிக" — என்றார்.

[ தொடரும் ]

## ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்தசுவாமிகள்

### திருமுறை இன்னிசைவாணர், வேலூர். க. சோக்கலிங்கம்.

இராகம் - சாரங்கா ] [ தாளம் - ஆதி

பல்லவி

திருஞானசம்பந்தர் திருவடியைத்தினமே
சேவித்திடு வோமே திருத்தருமபுரத்துறையும் (திரு)

அனுபல்லவி

திருந்திய அடியார்என்றும் சிவஞான நிட்டைகொள
திகழ்பதி ஞூறெடுக்கம் திறம்படச்செய்யுந்தவ (திரு)

சரணம்

தப்பாமல் முப்பொருளைத் தானுணரும் சம்பந்த
சரணாலயரை யடிமை தான்கொளும் தவமுதல்வர்
ஒப்பரும்ஞானம் நெல் ஒண்புலவர்க்கருளி
உலகறியத் தமிழா கரர்என் றுரைக்கும்உயர் (திரு)

வேலவன் விரும்பியுறை வேள்விமலை தொழும்
வேளையில் அம்மையிங்கு இலையோஎன வினவிய
ஏலக்குழல் வள்ளியும் இங்கிருக்கின்றேன் எனும்
இன்ப மொழிகேட்டு அன்புகனியத் தொழும் (திரு)

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Panchanathiswaraswami Devasthanam, Tiruvaiyaru.

Visited the temple with family and had very good Dharsanam. The temples were so clean that we forgot ourselves and were immersed in prayers. We thank the authorities for giving such awe inspring attitude for worshippers

(Sd.) S. Rengasamy,
Dy. S. P.
Thanjavur.

6—6—63.

# திருநாவுக்கரசுசுவாமிகள் திருக்கோயில் மகாகும்பாபிஷேகம்

வித்துவான்,

ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

திருநாவுக்கரசர் நம் தமிழ் நாட்டில் தோன்றி யருளிய சான்ளுேர்கள் பலருள், தலைசிறந்த ஒருவர்; ஒப்புயர்வற்ற மெஞ்ஞானப் பெருஞ்செல்வர், இறையருள் பெற்று நிறைநலம் சான்ற தவநெறிச்செம்மல், "நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்று வீர முழக்கம் செய்த வித்தகர்; திருத் தொண்டின் நெறி வளர்ந்தோங்கத் திருவவதாரம் செய்தருளிய ஞானத்தவமுனிவர்; சிறந்த அருட்பெருந்தொண்டர்; மொழிக்கு மொழி தித்திப்பாக அமைந்து சுவை முதிர்ந்து திகழும் செந் தமிழ் இயலிசைக் கருவூலம் ஆகிய தேவாரம் என்னும் தெய்வத் தமிழ்ப் பாடல்களை அருளிச்செய்தவர்!

தமிழக வரலாற்றிற் கி. பி. 4. 5, 6-ஆம் நூற்ருண்டுகள் இருண்டகாலமாக இருந்தன. அக்காலத்தில் வேற்றுச் சமயத் தவர்கள் தமிழகத்திற் புகுந்து தத்தம் கொள்கைகளைப் பரவச் செய்து வந்தனர். அதனல், நம் பழந்தமிழ் நாட்டின் பண்டைப் பழக்கவழக்க பண்பாடுகள் அனைத்தும் சிதைந்து சீர் குலைந்தன. தமிழகத்திற்குச் சிறப்பாக உரிய சைவ சமயம், ஒளிகுன்றி மங்கி இருந்தது. அந்நிலையில் கி. பி. 7-ஆம் நூற்ருண்டின் தொடக் கத்தில் தோன்றியருளிய திருநாவுக்கரசரும், திருஞானசம்பந் தரும் நாட்டின் மூலை முடுக்கர் எங்கணும் சென்று சுற்றித் திருவுலாப் போந்து, மக்கள் உள்ளத்தில் மண்டிக்கிடந்த அறியாமை இருளை அகற்றி, யாண்டும் அறிவொளியைப் பரப்பி னர். அதனல் தமிழ்நாடும், தமிழ்ப்பண்பாடும் பல்லாற்ருனும் மறுமலர்ச்சியுற்றுச் செழிப்பெய்திச் சிறந்தோங்கலாயின. தமிழ் நாட்டின் இன்றைய எல்லாச் சிறப்புகட்கும் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் என்னும் இருவரும் ஆற்றிய அரும்பெரும் தொண்டுகளே அடிப்படைக்காரணம் ஆகும் எனலாம். அது பற்றியே

" பாடிய செந்தமி ழாற்பழங் காசு பரிசில் பெற்ற
நீடிய சீர்த்திரு ஞானசம் பந்தன் நிறைபுகழான்
நேடிய பூந்திரு நாவுக் கரசோ டெழில்மிழலைக்
கூடிய கூட்டத்தி னால்உள தாய்த்திக் குவலயமே "

என்று நம்பியாண்டார் நம்பிகளும்,

" அருட்பெருகு தனிக்கடலும் உலகுக் கெல்லாம்
அன்புசெறி கடலுமாம் எனவும், ஓங்கும்
பொருட் சைவ முதற் சைவ நெறிதான் பெற்ற
புண்ணியக்கண் இரண்டெனவும் புவனம் உய்ய
இருட்கடுவுண் டவர் அருளும் அகிலம் எல்லாம்
ஈன்றாள் தன் திருவருளும் எனவும் கூடித்
தெருட்கலைஞா னக்கன்றும் அரசும் சென்று
செஞ்சடை வானவர் கோயில் சேர்ந்தார் அன்றே "

எனச் சேக்கிழார் சுவாமிகளும், திருநாவுக்கரசர் திருஞான சம்பந்தர் ஆகிய இரு பெருமக்களையும் புகழ்ந்து போற்றி யுள்ளனர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருநாவுக்கரசு சுவாமிகள், தென்னாற்காடு மாவட்டத்தில் பண்ணுருட்டிக்கு அருகில் மேற்கே 5 கல் தொலைவில் உள்ள திருவாமூர் என்னும் தலத்தில் சைவ வேளாளர் குலத்தில் குறுக்கையர் குடியில் புகழனார் என்னும் தந்தைக்கும், மாதினியார் என்னும் தாயாருக்கும் அருந்தவ மைந்தராகத் திலகவதியார் என்னும் தமக்கைக்கும் பின்தோன்றி யருளினார். இவருக்குப் பெற்றோர்கள் இட்ட பெயர் மருள் நீக்கியார் (அஞ்ஞானத்தை நீக்குபவர்) என்பது " பாவூற்றலர் செந்தமிழின் சொல்வளப் பதிகத்தொடை பாடிய பான்மையினால்" இவருக்குச் சிவபெருமான் திருநாவுக்கரசர் என்னும் திருப்பெயரை வழங்கினார், திருஞானசம்பந்தர் இவரை அப்பர் என்று மிகவும் அன்புடன் அழைத்துப் போற்றினார். அதனால் இவருக்கு 'அப்பர் சுவாமிகள்' என்ற பெயர் ஏற்படலாயிற்று.

திருநாவுக்கரசர் மகேந்திரவர்மன் (கி. பி. 600 — 630) பல்லவமன்னர்களின் காலத்தில் வாழ்ந்தவர். மகேந்திரவர்மன் பெருவீரன், காவியம் ஓவியம் முதலிய பலகலைகளில் வல்லவன். மத்தவிலாசப் பிரகசனம் என்னும் வடமொழி நாடகநூலை எழுதியவன். இம்மகேந்திர வர்மனது அரசவையிலேயே, திருநாவுக்கரசர் தம் இளமைப் பருவத்தில் தருமசேனர் என்னும பட்டம் பெற்று சமண சமயத் தலைவராக விளங்கியிருந்தார்.

பிறகு இறைவனருளால், இவர் தமது குலத்திற்கும் குடிக்கும் பழமையாக உரிய சிவநெறிக்கே, தமது தமக்கையர் ஆகிய திலகவதியார் செய்தருளிய தவமுயற்சியால் வந்து சேரப் பெற்ருர், அதன்பயனுக மகேந்திரவர்ம பல்லவ மன்னனும் மனமாற்றம் அடைந்து சிவநெறி சேர்ந்தான். இவ்வாற்ருல், தமிழகத்தில் திருநாவுக்கரசரால் ஒரு பெரிய சமயப் புரட்சி அரசியற் புரட்சியே நடைபெற்றது எனலாம்.

மகேந்திர வர்மனது புதல்வனே நரசிம்ம வர்மன். ஹர்ஷ வர்த்தனன் என்றும் வடநாட்டுப் பேரரசனை வெற்றிகொண்ட இரண்டாம் புலிகேசி என்றும் சாளுக்கிய மன்னனையே. பம்பாய் மாகாணத்தில் பாதாபி என வழங்கும் வாதாபி என்னும் இடத்தில் கி. பி. 642 இல் தோற்கடித்து வெற்றித்தூண் நாட்டிய பெருவீரன் நரசிம்மவர்மன். அதனுல் இவனை "வாதாபி கொண்ட நரசிம்மவர்மன்" என்று வரலாற்ருசிரியர் வழங்குவர் இவன் காலத்திலேயே ஹ்யூன்சியாங் என்ற சீனயாத்ரீகன் காஞ்சிபுரத்திற்கு வந்து தங்கி வியந்து சென்ருன்.

இவனுக்கு மாமல்லன் என்ற ஒரு விருதுப்பெயர் உண்டு. அம் மாமல்ல மன்னனுல் நிறுவப்பெற்றதே உலகப் புகழ்பெற்ற மாமல்லபுரம் ( மகாபலிபுரம் ) ஆகும். இவனுடைய படைத் தலைவராக விளங்கியவரே. பரஞ்சோதியார் எனப் பெயர் பெற்றிருந்த சிறுத்தொண்டர் ஆவார். வாதாபி போரில் நரசிம்மவர்மனுக்கு வெற்றி தேடித்தந்த படைத்தலைவர், பரஞ் சோதியார் என்னும் சிறுத்தொண்ட நாயனுரே ஆவார். நரசிம்ம வர்மனும், அவனுடைய தந்தையாகிய மகேந்திரவர்மனும் திருநாவுக்கரசரின் திருவருள் பெற்ற சீடர்களாகச் சிவநெறி யிலும் செந்தமிழிலும் மிகவும் ஈடுபட்டு, அவற்றைப் பெரிதும் பேணி வளர்க்கப் பல்லாற்ருனும் தொண்டாற்றியுள்ளனர் என்பதும், தமிழ்நாட்டில் இன்று சைவமும், சைவர்களும், திருக் கோயில்களும், மடாலயங்களும் தழைத்தோங்கி இருப்பதற்குக் காரணம் திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் செய்தருளிய அரும்பெருந் தொண்டுகளேயாகும் என்பதும்,

" மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாபித்
தொன்னகரம் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனஎண் ணிலகவர்ந்தே இகலரசன்முன்கொணர்ந்தார் "

என இவ்வுண்மையினைப் பெரியபுராணத்தில் ஆசிரியர் சேக் கிழார் சுவாமிகள் குறிப்பிடுதல் காணலாம். சிறுத்தொண்டரும்.

திருநாவுக்கரசரும் தம்முட் சிறந்த நண்பர்களாய்ச் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள் ஆவர். வரலாற்று ஆராய்ச்சிக் கண்கொண்டு காண வல்லவர்களுக்கு நன்கினிது விளங்கும்.

இத்துணைப் பெருஞ்சிறப்பு வாய்ந்த திருநாவுக்கரசர் பெருமானை நாம் அவர் பெருமையுணர்ந்து போற்றுதிருத்தல் முறையாகாது. மேலைநாடுகளில் 'ஷேக்ஸ்பியர்' போன்ற உலகியற் கவிஞர்களுக்கும்கூட எவ்வளவோ சிறப்புச்செய்து போற்றுகின்றார்கள். அவர்கள் வாழ்ந்த கோயில்கள்போலக் கருதி, நினைவுச்சின்னங்கள் ஆக்கிப் பெரிதும் போற்றுகின்றனர். ஒவ்வொரு சமயத்தைச் சேர்ந்தவர்களும், அவ்வச் சமயத்தின் ஆசாரியர்களைப் போற்றி வழிபடுவது மிகவும் இன்றியமையாதது. ஆசாரியர்களைப் போற்றாமல், எந்தச் சமயமும் வளர்ந்ததாக வரலாறு இல்லை. நாட்டுப்பற்று, கலைப்பற்று என்பன மிகவும் இன்றியமையாதன ஆதல்போல மக்களுக்குச் சமயப் பற்றும் மிகமிக இன்றியமையாத தொன்றாகும். சமயப்பற்று வேறு, சமயவெறி வேறு. ஒரு சிலர் இரண்டையும் ஒன்றாகக் கருதி மயங்குகின்றனர். அறிவார்ந்த நல்ல சமய உணர்வும், பற்றும் மனித குலத்துக்கு ஆக்கம் அளிக்கவல்லவை. நல்ல சமயவுணர்வுடைய நன்மக்களுக்குத் தம் சமயாசாரியர்களைத் தக்கவாறு சிறப்பித்துப் போற்றுதல் தலையாய கடமையாகும்.

திருஞானசம்பந்தருக்கு அவர் அவதரித்த தலமாகிய சீர்காழியில் ஸ்ரீ பிரமபுரீஸ்வரர் கோவிலில் ஒரு தனிக்கோயில் அமைந்துள்ளது. ஆனால், திருநாவுக்கரசரின் அவதாரத்தலம் ஆகிய திருவாமூரில் திருநாவுக்கரசருக்கு ஒரு நினைவுச்சின்னமாக கோயில் ஒன்று இல்லாதது, நெடுங்காலமாக ஒரு பெருங் குறையாக இருந்துவந்தது. திருவாமூர் தமிழகத்தில் நடு நாட்டைச் சேர்ந்தது. தொண்டை மண்டலத்திற்கும் சோழ நாட்டிற்கும் நடுவே அமைந்திருப்பது நடுநாடு. இது சேதிநாடு, திருமுனைப்பாடிநாடு என்னும் இருபிரிவுகளை உடையது. மலையமான் திருமுடிக்காரி என்னும் சங்ககால வள்ளல் வாழ்ந்த திருக்கோவலூர் நடுநாட்டின் தலைநகரமாகும். திருவாமூர் திருமுனைப்பாடி நாட்டில் உள்ளது. முனையரையர் என்னும் வீரப் பெருமக்கள் வாழ்ந்து வந்தமைபற்றி இதற்கு இப்பெயர் வந்தது. (முனையரையர்+பாடி) திருமுனைப்பாடி நாட்டில்தான் சைவ சமய ஆசிரியர்களாகிய திருநாவுக்கரசரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தோன்றியருளினர்.

"அறந்தருநாவுக்கரசும் ஆலால சுந்தரரும் பிறநதருள உளதானல் நம்மளவோ பேருலகில் சிறந்ததிரு முனைப்பாடித் திறம்பாடும் சீர்ப்பாடு" எனச் சேக்கிழார் சுவாமிகள் இந் நாட்டைப் புகழ்ந்து போற்றுகின்றார். இதன்கண் உள்ள திருவாமூர் திருநாவுக்கரசர் தோன்றிய சிறப்பினுல் சிவநெறியை உலகெங்கும்பரப்பிய சிறப்பைப்பெற்றுத் திகழ்கின்றது. 'சைவ நெறி ஏழுலகும் பாலிக்கும் தன்மையினுல் தெய்வ நெறிச் சிவம் பெருக்கும் திரு ஆம் ஊர் திருவாமூர்". என்று இதனைச் சேக்கிழார் இனிது புகழ்ந்து மகிழ்கின்றார்.

இத்தகைய திருவாமூரில் திருநாவுக்கரசருக்கு ஒரு கோயில் இப்போது அமைக்கப்பட்டுள்ளது. திருநாவுக்கரசர் தோன்றி யருளிய இல்லம் இருந்த இடத்திலேயே கோயில் அமைந்து உள்ளது. இந்நாளில் இவ்வூரில் ரெட்டியார் படையாட்சிகள் என்னும் இருவகுப்பினரே வாழ்ந்து வருகின்றனர். ஆயினும் கோயில் கட்டப்பெற்றுள்ள இடம் "வேளாளன் வீடு". என்றே இன்றளவும் வழங்கிவருகிறது. சுவாமிகள் தோன்றியருளிய" குறுக்கையர்குடி" என்பதனைச் சேர்ந்த குடும்பங்கள் அருகில் உள்ள இலந்தம்பட்டு, சேமக்கோட்டை ஏரிப்பாளையம், விளாம்பூர், கூடற்பள்ளி, நெடும்பூர், இராசேந்திர சோழகன் வீரநத்தன், சிறுகாட்டூர், உறையூர், முதலிய பல இடங்களில் உள்ளன. இக்குடும்பத்தினர் 'பெண்ணைக்கரையார்' என்று வழங்கப்படுகின்றன. பெண்ணையாற்றின் கரையில் வாழ்ந்த வர்கள் என்னும் காரணம்பற்றி இப்பெயர் அமைந்தது. மேலும் இவர்களுள் ஒரு வழக்கம் இருந்துவருவதும் ஈண்டுக் குறிப் பிடுதற்குரியது.

திருநாவுக்கரசரின் தமக்கையாராகிய திலகவதியாருக்கு மணம் பேசி நிச்சயம் செய்யப்பெற்று இருந்த கணவராகிய கலிப்பகையார், மணம் முடிவதற்கு முன்னரே இடையில் அரசன் ஏவலால் போருக்குச் சென்று, அங்கே நாட்டிற்காக வீரமரணம் பெற நேர்ந்ததனுல், திலகவதியார் அதன் பிறகு வேறு ஒருவரை யும் மணந்து கொள்ள மறுத்து 'அம்பொன் மணிநூல் தாங்காது அனைத்துயிர்க்கும் அருள் தாங்கி, இம்பர் மனைத்தவம் புரிந்து' வாழ்ந்து வந்தார். அதனுல் குறுக்கையர் குடியைச் சேர்ந்த குடுப்பத்தினர், திருமண நிகழ்ச்சிக்கு முன்னரே நிச்சய தார்த்தம் செய்து கொள்ளாமல், திருமணத்திற்குச் சிறிது முன்னர்தான் நிச்சயதார்த்தச்சடங்கு செய்து வருகின்றனர்.

திருநாவுக்கரசர் கோயில் அமைந்துள்ள மனையில், மிகவும் புராதனமான களரிவாகை என்னும் ஒரு மரம் பரந்து அடர்ந்த நிலையில் வளர்ந்து விளங்குகின்றது. இப்புராதன மரம் திருக்கோயிலுக்குத் தலவிருட்சம் போல அமைந்துள்ளது. இம்மரத்தின் பட்டைகளும், இலைகளும் விஷக்கடிக்கும் சுரத்திற்கும் கைகண்ட மருந்தாக பயன் படுகின்றன. திருநாவுக்கரசர் அப்பூதி நாயனர் இல்லத்தில் விடம் தீர்த்த அருட்செயலை, இம் மரத்தின் இயல்பு நமக்கு நினைப்பூட்டுகின்றது. திருநாவுக்கரசர் அகழ்ந்த திருக்குளம் ஒன்றும், இப்பொழுது ஏரியாக இருந்து வருகின்றது.

திருவாமூரில் மிகவும் புராதனமான சிவன்கோயில் ஒன்றும் உள்ளது. அது சிறியதாக இருப்பினும் அழகியதாக உள்ளது. இக்கோயிலுக்குமுதற்குலோத்துங்கன் திருப்பணிசெய்துள்ளான். சுவாமி பெயர் பசுபதீஸ்வரர். அம்பிகையின் பெயர் திரிபுர சுந்தரி. ஊருக்கு ஈசான மூலையில் உள்ளது இக்கோயில். இங்குள்ள தலவிருட்சமாகிய கொன்றைமரம் ஆண்டுமுழுவதும் பூக்கும் சிறப்புடையது.

திருநாவுக்கரசு கோயில் ஏற்படுவதற்கு சென்னை அறநிலைய முன்னுள் ஆணையர் திரு. அ. உத்தண்டராம பிள்ளை B. A., B. L., I. A. S., அறநிலையத்துறையிலிருந்து ரூ 8,000 கொடுத்துதவித் திருப்பணியைத் தொடங்கச் செய்தார்கள், இப்போதுள்ள அறநிலைய ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார் பி. ஏ., பி. எல்., திருப்பணி மேலும் நடைபெறுவதற்தாக மேலும் ரூ 8,000 உதவினர்கள். இவற்றேடு தமிழகத்திலுள்ள ஆதீனங்களும், திருக்கோயில்களும், சைவப்பெருமக்களும் பொதுமக்களும் உதவிய தொகையும் சேர்ந்து ரூ. 32,000 செலவில், திருவாமூர் வாசிகளும், திருப்பணிக் குழுவினரும், தமது ஊக்கத்தினுலும் உழைப்பினுலும் திருநாவுக்கரசர்கோயில் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், அம்மகாமண்டபத்தில் விநாயகருக்கு ஒரு மண்டபம் புகழனர், மாதினியார், திலகவதியார் ஆகிய மூவருச்கும் ஒரு விமானம், திலகவதியார் நூல்நிலையம், மடைப் பள்ளி இவற்றையெல்லாம் உட்படுத்திய திருமதில் முதலியவற்றைச் சிறப்பாக அமைத்துள்ளார்கள்,

# திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானம்பிகாசமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில திருவிழாவின்போது 10-6-63 முதல் நிகழ்ந்த திருநெறிய தெய்வத் தமிழ்மாநாட்டின் நிகழ்ச்சிகள்.

எட்டாம் திருநாள் :

10—6—63 திங்கட்கிழமை பிரபந்தத் திருநாள். சென்னை, இந்து சமய அறநிலைய ஆணையர், திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் பி. ஏ., பி. எல்., அவர்கள் ஆற்றிய தொடக்கவுரையின் சுருக்கம் :-

குருவழிபாடு மிகவும் இன்றியமையாதது. இறைவன் அருள் குருவின் மூலமாகத்தான் கிட்டும். குருவின் உபதேசத்தை இறைவன் உபதேசமாகவே கொள்ளுகிறோம். இம்முறை நமது சமயத்திற்கே உரிய சிறப்பாகும். ஆலயம் வழிபாடு - ஆலயத்திற்குச் செல்லும் முறை ஆகியவற்றை நம் முன்னோர்கள் காரணத்தோடுதான் அமைத்தார்கள். அதனால் நமக்கு மனத்தூய்மை, ஒருமைப்பாடு, சிவசிந்தனை ஏற்படுகிறது. இறைவன் ஆலயத்தில் சிறப்பாக அமைந்திருந்தாலும் பொது வகையான் எல்லா உயிர்களிடத்தும் இருக்கிறான். எனவே மக்கட் தொண்டு மிகவும் வேண்டற்பாலது.

சென்னை, கலைமகள் ஆசிரியர் செந்தமிழ்ச் செல்வர், வித்துவான், திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ., அவர்கள் "சிவஞான சுவாமிகள்" என்னும் பொருள் பற்றிப்பேசினார்கள். சிவஞான முனிவர் தமிழுக்குச் செய்துள்ள தொண்டு, அவர் இயற்றிய நூல்கள், அவரது கல்வித்திறம் ஆகியவற்றை விரிவாக விளக்கி, அமுதாம்பிகைப் பிள்ளைத்தமிழ் என்னும் முனிவரின் நூலின் சில சுவையானப் பாக்களை அருமையாக விளக்கினார்கள்.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர் வித்துவான், திரு. சொ, சிங்காரவேலன் எம். ஏ,, அவர்கள் 'குமரகுருபரர்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றியதன் சுருக்கம் :-

குமரகுருபரர் பிரபந்தங்கள் தமிழ் இலக்கிய வரலாற்றில் கி. பி. 17-ம் நூற்றுண்டின் திருப்புமையமாக உள்ளன. பக்திப் பாடல் நெறியில் அடிகளாரின் பாடல்கள் உணர்ச்சி, அநுபவம், கற்பனை ஆகிய அனைத்தும் கலந்து விளங்குகின்றன. இவற்றைப் பயிலுங்கால் நம்முள்ளம் பெரிதும் கனிகின்றது. செந்திலாண்டவன் திருமுன் கந்தர்கலி வெண்பா முதல்முதல் அடிகளார் பாடிய நூல் இது. குட்டிக் கந்தபுராணம் என்று கூறப் பெறும் சிறப்புடையது. மீனுட்யம்மைப் பிள்ளைத் தமிழும் தமிழ் இலக்கிய உலகில் நிலைத்த இடம் பெற்றுள்ளன. கலம்பகங்களில் மதுரைக் கலம்பகம் சிறப்பிடம் பெற்றுள்ளது. "அரும்பிட்டுப் பச்சிலையிட்டு ஆட் செய்யும் அன்னையவள் தரும்பிட்டுப் பிட்டுண்டாய் தலையன்பிற் கட்டுண்டே" என்ற வரிகளில் அமைந்த நயங்கூர்ந்து நோக்கற்குரியது. சிதம்பர செய்யுட் கோவை யாப்பிலக்கியமாக விளங்குகின்றது. "விருந்தாடும் ஆரூரா மென்மலர்த்தாள் தூக்காது, இருந்தாடுகின்றபா என்" என்ற திருவாரூர் மும்மணிக்கோவைப் பகுதி கற்பனைச் சிறப்புடையது. குமரகுருபரர் பாடல்களை ஆழ்ந்து பயின்று இன்புற வேண்டுவது தமிழ்ப் பெருமக்கள் கடனுகும்.

சென்னை, சமயப்பிரசார நிலையம், வித்துவான் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் "சிவக் கொழுந்து தேசிகர்" என்னும் பொருள்பற்றிப் பேசினுர்கள். சுவாமிகள் அவர்கள் தேசிகர் அவர்களின் வரலாறு கூறி பிறகு அவர் இயற்றிய கோடீச்சுரக்கோவை என்னும் அரிய நூலின் சிறந்த கருத்துக்களை சுருக்கமாக விளக்கியருளினுர்கள்.

பிறகு திரு. பித்துக்கொளி முருகதாஸ் பஜனை மிக உருக்கமான முறையில் நிகழ்ந்தது.

ஒன்பதாம் திருநாள் :

11—6—63 செவ்வாய்க்கிழமை - திருமுறைத் திருநாள். சென்னை உயர்மன்ற நீதிபதி, திரு. ஆர். சதாசிவம் பி ஏ.பி.எல். அவர்கள் திருமுறைத் திருநாளில் தொடக்கவுரையாற்றுகையில் கூறியதன் சுருக்கம்.

திருமுறைகள் நம் வாழ்வைத் தூய்மைப்படுத்துபவை. " திருமுறைகள் ஓதாய் " என்று தருமையாதீன முதற் குரவரும் மொழிந்தருளினுர்கள். திருமுறைகள் பன்னிரண்டாக வகுக்கப் பட்டுள்ளன. சம்பந்தர் தேவாரம் முதல் மூன்று திருமுறை களாகவும், அப்பர் தேவாரம் அடுத்த மூன்று திருமுறைகளாக வும், சுந்தரர் தேவாரம் ஏழாவதாகவும் திருவாசகம் எட்டா வதாகவும் வகுக்கப்பட்டுள்ளன. திருவிசைப்பாவும் திருப் பல்லாண்டும் ஒன்பதாவதாகவும், திருமந்திரம் பத்தாவதாகவும் பல பிரபந்தங்கள் பதினோராவதாகவும், சேக்கிழார் அருளிய பெரிய புராணம் பன்னிரண்டாவதாகவும் வகுக்கப்பட்டுள்ளன. திருமுறைகளை ஓதி உணர்ந்து சைவர்கள் உய்யவேண்டும்.

திருக்குறள்மணி, திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்பிர மணியம் பி. ஏ., பி. எல்., அவர்கள் ஆரூரர் சீருரும் தமிழ் என்ற தலைப்பில் பேசியதன் சுருக்கம் :-

சுந்தரர் செந்தமிழை ஆரூரரின் சீருரும் பாடல்கள் என் றழைப்பது மிகவும் பொருத்தம். சுந்தரர் திருமுறை ஏழாவதாக அமைந்துள்ளது. சேக்கிழார் சுந்தரர் வரலாற்றையே தம் புராணத்திற் பெரிதும் விரித்துரைக்கின்ருர். இன நலனுக்குத் தோழராக இருந்தவர்; தம்பிரான் தோழர் என்ற சிறப்புக் கேற்ப இவர் பாடியருளிய பாடல்களில் அந்த உரிமையைக் காணலாம். " ஏழிசையாய் இசைப்பனுய் ", " நாளும் இன்னி சையால் தமிழ் பரப்பும் ", தானெனை முன்படைத்தான் ". " பொன்னுமெய்ப் பொருளும் தருவானை ", முதலிய பாடல் களின் அரும் பொருள்கள் சிந்தித்துணர்தற்குரியன. சுந்தரர் வரலாற்றில் வரும் அற்புதச் செயல்கள் அறிந்து மகிழத்தக்கன. திருக்கயிலையில் தொடங்கித் திருக்கயிலையில் நிறைவெய்து கின்றது சுந்தரரது வரலாறு. இதனைச் சேக்கிழார் காட்டும் நெறிநின்று அனைவரும் கற்றுணர வேண்டும்.

செந்தில் குறவஞ்சி நாட்டிய நாடகம் நிகழ்ந்தது. திருச் செந்தூர் திரு. ஆர். சரவணமுத்து பாகவதர் அவர்களால் தயாரிக்கப்பெற்றது. பங்கு கொண்டவர், குமாரி சுசீலா (மதனமோகினி) குமாரி ராஜம் (குறத்தி) குமாரி லலிதா (ஸகி குறவன்) ஆகியோர் பங்குகொண்டு நடித்தனர்.

## சமயக் கட்டுரைகள்

ஆசிரியர் : பண்டிதமணி திரு. சி. கணபதிப் பிள்ளை, யாழ்ப்பாணம்; பதிப்பாளர் :- பழைய மாணவர்கள், திருநெல்வேலி சைவாசாரிய கலாசாலை, பக்கங்கள் 234. விலை. ரூ. 3—00.

பண்டிதமணி திரு. பிள்ளையவர்கள் யாழ்ப்பாணம் தந்த புலவர் மணியாவார். பல ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய முதுபெரும்புலவர். "தினகரன்" இதழில் வெளிவந்த சைவப் பொருள்பற்றிய கட்டுரைகளைத் தொகுத்து இப்போது வெளியிட்டுள்ளார்கள். நல்ல நடை; அரிய கருத்துக்கள். 'திருவருட் குறிப்பாகிய தருமத்தை விசாரிக்கத் தொடங்குவது சமயத் தொடக்கம்' முதலிய சிந்தனைக்குரிய பல செய்திகளை உட்கொண்டது இந்நூல். பக்கம் 42, 54, 126, 179, முதலிய இடங்களைப்போல் சீரிய கருத்துக்கள் பக்கங்கள் தோறும் திகழ்கின்றன. நிலைத்தபணி; சிந்தனையைத் தூண்டும் செம்பொருட் கட்டுரைகள்; பண்டிதமணியவர்களின் பணி பாராட்டிற்குரியது. அன்பர்கள் வாங்கிப் பயில்க; இன்புறுக.

— சொ. சிங்காரவேலன் எம். ஏ..

## வித்துவான் தேர்வு வினாவிடை 2.

ஆசிரியர் ; வித்துவான் தா. ம. வெள்ளைவாரணம், தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள், (வழி) கும்பகோணம். பக்கங்கள் : 124. விலை ரூ. 1—50 ந. பை.

எழுத்ததிகாரத்திற்கு வினாவிடையாக்கித் தந்துள்ள இவ்வாசிரியர் சொல்லதிகாரம் சேனாவரையத்திற்கு இவ்வினாவிடை நூலை இப்போது வழங்கியுள்ளார். பல ஆண்டுகளாக ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகளவர்களால் நிறுவப்பெற்ற செந்தமிழ்க் கல்லூரியிற் பணியாற்றி வருவதால் இவ்வாசிரியர் தாம் மேற்கொண்ட அரிய முயற்சியில் மிக எளிமையாக வெற்றி பெற்றுள்ளார். பல்கலைக்கழக வித்துவான் தேர்விற்குத் தனிநிலையாகவும், கல்லூரி வழியாகவும் செல்லும் மாணவர்களுக்கு மிகப் பயன்படும் இந்நூல். ஆராய்ச்சி வினாக்களும் விடையுடன் தரப்பெற்றுள்ளன. தெளிவான விடைகள்; எளிய நடை; இனிய உதாரணங்கள்; சுருங்கிய அமைப்பு. ஆசிரியர் முயற்சி பாராட்டிற்குரியது. மாணவர்கள் ஆசிரியர்க்கு எழுதிப்பெறலாம்.

— புலவர் . வேலன்.

# செய்திகள்

தருமையாதீனத்தில் :

## குருபூஜை விழா

12—6—63 புதன்கிழமை ஸ்ரீ குருஞானசம்பந்தர் சிவசமாதி கூடிய திருநாள். அன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் காலையில் மேலக்குருமூர்த்த தரிசனத்திற்கு எழுந்தருளி வழிபாடாற்றினர்கள். பின்னர் ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஆலவாய்ச் சொக்கலிங்கப்பெருமான் வழிபாடு நிகழ்ந்தது. அபிஷேக ஆராதனைகள் சிறப்புற நிகழ்ந்தன. பெருமக்கள் பலர் வந்து வழிபட்டுய்ந்தனர்.

மாலை 6 மணிக்குத் திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தில் பெங்களூர் திருமதி ரமணி அம்மாள் பஜனை சிறப்புறநிகழ்ந்தது. பின்னர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் காவிரீத் திருமஞ்சனத்திற்கு எழுந்தருளினர்கள். இரவு 10 மணிக்கு மேல் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருமடத்திற்கு எழுந்தருளி ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்த்தி கொலுக்காட்சி வழங்கினர்கள். பின்னர் எல்லோருக்கும் திருமெய்ஞ்ஞானம் வழங்கப்பட்டது.

## பட்டணப்பிரவேசத் திருநாள்

13—6—63 வியாழக்கிழமை ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. பின்னர் மாகேஸ்வர பூஜையும் சிறப்புற நிகழ்ந்தது. இரவு பத்துமணிக்கெல்லாம் எடுபிடிகள் யானைகள் முதலியவற்றின் வரிசைகள் புறப்பட்டன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ சொக்கநாதப் பெருமானை வழிபட்டு பட்டணப்பிரவேசத்திற்கு எழுந்தருளி சிவிகையில் ஆரோகணித்தார்கள். மாயூரம் முதலிய இடங்களிலிருந்து வந்த சைவப் பெருமக்கள் பலர் சிவிகையைச் சூழ்ந்து வர சிவிகை புறப்பாடாயிற்று. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள்

மெய்யன்பர்களுக்கு மரியாதைகள் செய்வித்து ஆசி வழங்கினுர் கள். வாணவேடிக்கைகள் ஒருபுறம் நிகழ்ந்தவண்ணமிருந்தன. மற்றெருபுறம் பொய்க்கால் குதிரை ஆட்டமும், மயில்டான்ஸ் முதலியனவும் நிகழ்ந்தன. சிவிகைக்கெதிரில் நாதஸ்வரக் கச்சேரி கள் நடைபெற்றன. இவ்வாறு பட்டணப் பிரவேசத் திருநாள் எல்லாவகையான மக்களும் கண்டு களிப்பெய்தும் நிலையில் நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் அன்பர்கள் கண்டு களித்து உய்யும் வண்ணம் கொலுவீற்றிருந்து அருள் பாலித்தார்கள்.

## குருபூஜை விழா அன்னம்பாலிப்பு

ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமான் திருவருளால் 12—6—63 புதன்கிழமை ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூசை விழாவை முன்னிட்டு அடியவர்கட்கும், ஏழைகட்கும் அன்னம் பாலிப்பும், சமய விரிவுரைகளும் நடைபெற்றன.

திருக்கேதாரம், ஸ்ரீகாசி, சிதம்பரம், மதுரை, திருவாரூர் (இராஜன்கட்டளை), ஸ்ரீவில்லிபுத்தூர், திருநெல்வேலியில் தருமை யாதீன மடம், சிவசைலம், கன்னியாகுமரி, இராமேஸ்வரம் முதலிய பல இடங்களில் ஏழைகட்கு அன்னம்பாலிப்பு நிகழ்த்தப் பெற்றது. பலர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

## சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய
## சமயப்பிரசார நிலைய வழிபாட்டுக் குழுவினரின்
## மாதாந்தர சமயப்பிரசார வழிபாடு

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தின் மாதாந்தர சமயப்பிரசார வழிபாடு 30—6—63 ஞாயிறு மாலை 6 மணிக்கு சென்னை வன்னியர் தேனும்பேட்டை யில் உள்ள ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் சிறப்பாக நடைபெற்றது. வழிபாட்டுக்குழுவினரை ஷ கோயில் அறங்காவலர்களும், சிவாசாரியர்களும் பூர்ணகும்ப மரியாதை யுடன் வரவேற்று முறையாக வழிபாட்டை நடத்திவைத்தனர். குழுவினர் ஒவ்வொரு சந்நிதியிலும் தேவாரம், திருப்புகழ் முதலிய துதிப் பாடல்களை ஒருமிக்கச் சொல்லிக் கூட்டு வழிபாடு

நிகழ்த்தினர். நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் திரு. P. சுவாமிநாதன் வழிபாட்டிலும், சமயப் பிரசாரத்திலும் திருமுறைகளை இசையுடன் ஓதி மகிழ்வித்தார்.

வழிபாட்டிற்குப் பிறகு ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வாழ்த்துரைகூற, வித்துவான், திரு. G. M. முத்துசாமி பிள்ளை B. A., I. A. S. (ஓய்வு) அவர்கள் தலைமையில் சமயப் பிரசாரக் கூட்டம் தொடங்கியது. தலைவரவர்கள் கூட்டு வழிபாட்டின் அவசியத்தையும், வழிபாட்டினால் உள்ளத்தூய்மை கிடைக்கிறது என்பதற்குச் சில உதாரணங்களையும் எடுத்துரைத்தார்கள். திரு. K. கமலக்கண்ணன் M. L. C. அவர்கள். நிலைய வழிபாட்டில் கலந்துகொள்வோர் மாதத்திற்கு மாதம் பக்தித் துறையில் வளர்ச்சியடைந்து வருகிறார்கள் என்பதை விளக்கிப் பேசினார்கள். திரு. ச. சிவகுமாரன் அவர்கள் வரவேற்புரையும், நன்றியுரையும் கூறி ஜூலைமாத வழிபாடு, 14—7—63ல் திருவாரூரில் அப்பர் சுவாமிகள் மகாகும்பாபிஷேகமானதால் அன்று மாலை திருவாரூர் ஸ்ரீ பசுபதீஸ்வரர் கோயிலிலும், திருநாவுக்கரசு நாயனார் திருக்கோயிலிலும் நிகழும் என அறிவித்தார்கள். திரு. P. சுவாமிநாதன் கடவுள்வாழ்த்துப் பாடினார்.

## வைத்தீசுவரன்கோயில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

வைத்தீஸ்வரன்கோயில் ஸ்ரீ தையல்நாயகி சமேத ஸ்ரீ வைத்தியநாத சுவாமிக்கும். ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கும் 19—6—63 மண்டலாபிஷேகக் கிருத்திகையன்று சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலைய அன்பர்கள் சார்பில் வழக்கம்போல் அபிஷேக, சகஸ்ரநாம அர்ச்சனைகள் செய்யப்பெற்றன. ஷை பிரசாதங்கள் 20—6—63 மாலை 7 மணிக்குச் சென்னைத் தியாகராய நகரில் உள்ள தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் திரு. K. E. அருணாசல முதலியார் M. A. B com. அவர்கள் தலைமையில் பிரார்த்தனை நிகழ்த்தி அன்பர்கட்கு வழங்கப்பட்டது. திரு. P. சுவாமிநாதன் வேளூர்த் தேவாரம், திருப்புகழ், பிள்ளைத் தமிழ் முதலியவற்றைப் பாடிப் பிரார்த்தனை நிகழ்த்தினார்.

---

# எதிர்காலம்

திரு. கே. முத்துஜோதிடர்

( சோபகிருதுஙூ ஆடிமீ 1உ முதல் 31உ முடிய )

( 17—7—63 முதல் 16—8—63 முடிய )

**1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼**

அசுவதி நான்கு பாதங்களும், மிச்ர பலனைத்தரும். காரிய விக்னங்களும் உண்டு பண்ணும். பரணி நான்கு பாதங்களும் கார்த்திகை முதல் பாதமும் சுபத்தைத்தரும. கிரக பூமி லாபங்களும். ஆடை ஆபரணச்சேர்க்கைகளும் தரும். வித்யா விருத்தியாகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

**2. ரிஷபம். கார்த்திகை ¾ - ரோஹிணி - மிருகசீரிஷம் ½.**

கார்த்திகை 2-3-4 பாதங்களும், மனவேற்றுமைகளைத்தரும். காரிய விக்னங்களை உண்டு பண்ணும். ரோகிணி நான்கு பாதங்களும் மிருகசீர்ஷம் 1-2, பாதங்களும், ஆரோக்கியக் குறைவையும், வரவுக்கு மிஞ்சின செலவையும் தரும். அடிக்கடி சஞ்சாரம் உண்டு பண்ணும் தெய்வபலத்தால், ரிணரோக நிவர்த்திக்கு மார்க்கம் ஏற்படும். புதன், வியாழன் சுபமாகும்.

**3. மிதுனம். மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾.**

மிதுன ராசி 9-பாதங்களும், சுபமேயாகும். ஆனல் இடம் மாறச்செய்யும். மேலோர் பெரியோர் அன்பு கிட்டும். அடிக்கடி சஞ்சார பலன் ஏற்படும். வித்யா விருத்தியாகும். சனி, செவ்வாய் சுபமாகும்.

**4. கடகம். புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.**

புனர்பூசம் நான்காம் பாதம் உத்தியோக உயர்வைத்தரும். கீர்த்தி, பத்திரம் கிடைக்கும். தித்வீபாந்தர சஞ்சாரபலனை உண்டு பண்ணும். பூசம் நான்கு பாதங்களும், அசுபத்தைத்தரும் சகல

காரியமும் விக்னமடையும்; தேவகோபம், உண்டு பண்ணும். ஆயில்யம் நான்கு பாதங்களும், ரிண நிவர்த்தியாகி, கிரக சுகம் ஓங்கும், பந்து: மித்திராதிகளால், சுகம் உண்டாகும். தெய்வ பலம் முன்னிற்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

## 5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் ¼

மகம் நான்கு பாதங்களும், ஆரோக்யத்தைத்தரும். தெய்வ பலம் உண்டாகும். ஸ்திரஜீவனம ஏற்படச் செய்யும். பூரம் நான்கு பாதங்களும், அனுவசியமான தொல்லேகளேயும் கடன் விருத்தியையும் தரும். மனம் நிம்மதி இராது. உத்திரம் முதல் பாதம், நூதன முறையில், தொழில் பயிற்சியைத்தந்து. மேல்பதவி களேயும் தரும். மனம் சந்தோஷம் அடையச்செய்யும், சனி, செவ்வாய் சுப மாகும்.

## 6. கன்னி. உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

உத்திரம் 2-3-4 பாதங்கள், எதிர்பாராத நன்மைகளேத் தந்து சகல துக்கங்களேயும் விலகச் செய்யும், தெய்வபலம் ஓங்கி நிற்கும். ஹஸ்தம் நான்கு பாதங்களும், மகாயக்ஞ பலன் களேயும், மகாதான பலன்களேயும் தந்து. தெய்வீகத் தோற்றத் தால், உலகில் அசாத்யம் என்று எதையும் நினேயாமல், சகல காரியங்களேயும், சுலபகரமாயும், கீர்த்தி கரமாயும் நடத்தும். சதா தெய்வத்தின் தோற்றம் இருந்து கொண்டே இருக்கும். மகான்களாலும், தபோபலம் உள்ளவர்களாலும், எப்பொழுதும் அனுகூலம் ஏற்படச்செய்யும். ஆரோக்யம் உண்டு பண்ணும், சித்திரை 1-2 பாதங்கள், அதிகசெலவினங்களேயும் குடும்பத் தொல்லேகளேயும், உண்டு பண்ணும். ஆனலும் மாதக்கடைசியில் சுபத்தைத்தரும். புதன், வியாழன் சுபமாகும்.

## 7. துலாம் சித்திரை ½, சுவாதி விசாகம் ¾.

துலாராசி 9-பாதங்களும், உலக பிரசித்தியை உண்டு. பண்ணும். தெய்வபலம் முன்னிற்கும். மேலோர் பெரியோர் களுடைய அன்பும் வாழ்த்தும் கிடைக்கச் செய்யும், குடும்பம் ஓங்கும். நூதன வஸ்திராபரணச் சேர்க்கைகளேத்தரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

## 8. விருச்சிகம். விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

விசாகம் 4-ம் பாதம், சுபமிராது. வீண் அலேச்சல்களேத்தரும் தொழில் பங்கம் உண்டுபண்ணும், அனுஷம் நான்கு பாதங்களும்

கேட்டை நான்கு பாதங்களும் சுபம் உண்டு பண்ணும், கீர்த்தி பத்திரம் தரும். மேல்பதவிகள் கிடைக்கச்செய்யும், விவசாயம் ஓங்கும். பரிசனங்கள் அதிகமாகும், தூரதேச சஞ்சாரம உண்டு பண்ணும். சனி, ஞாயிறு சுபமாகும.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9-பாதங்களும், ஆரோக்யத்தைத்தரும், நஷ்டமான பொருள்கள் தாஞக வந்து சேரும், தொழில் ஓங்கும் விவகாரம் செயிக்கும், சத்துருக்கள் சரண் அடையவார்கள். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகாராசி 9-பாதங்களும், உத்தியோக லாபத்தைத் தரும். குடும்பம் ஓங்கும், தெய்வபலம் முன்னிற்கும். பந்துமித்ராதிகளால் அனுகூலம் உண்டு பண்ணும். ஞாயிறு, திங்கள் சுப மாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$.

அவிட்டம் 3, 4 பாதங்கள் சுபத்தைத் தரும். மங்களம் உண்டுபண்ணும் கிரக சுகம் ஓங்கும். சதயம் நான்கு பாதங்களும் அடிக்கடி சஞ்சாரத்தைத் தரும். ஆரோக்யக்குறைவு காட்டும். மனம் சாந்தி இராது. பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள் ஆரோக்யம் உண்டுபண்ணும். நஷ்டமான பொருள் வந்து சேரும். இல்லறம் ஓங்கும் தெய்வபலம் முன்னிற்கும். புதன் வியாழன் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$ - உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் சுபசந்தோஷங்களைத் தரும் தொழில் ஓங்கும். மேல்பதவி கிடைக்கும். பந்துமித்ரர்களாலும் புத்திராதிகளாலும் சுகம் உண்டுபண்ணும். வெகுகாலமாய் எதிர்பார்த்து நடவாத காரியங்கள் எல்லாம் சுலபமாய் நடக்கும். நஷ்டமான பொருள் வந்து சேரும். தெய்வபலம் பிரகாசிக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

குறிப்பு: ஷை ஆடி மாதம் தக்ஷிணாயன புண்ணிய காலம். ஷை புண்ணிய காலத்தில் சூரியனும் அங்காரகனும் சமகாலத்தில் கடக ராசியிலும் கன்னியாராசியிலும் பிரவேசம் செய்கிறார்கள். ஷை இருவரும் இவ்வருஷத்துக்கு ராஜா மந்திரிகள் ஆவார்கள் நமது தக்ஷிணபாரதத்திற்கு அங்காரக பூமி என்று பெயர். ஆதலால் அவரே இவ்வருஷம் ராஜாவாக அமைந்து இருப்ப

தால் அங்காரக ஸ்வரூபியான திருமுருகன் அருள் ஏற்பட்டு
மற்ற எல்லா தெய்வங்களுடைய சக்தியும் முன்னின்று தெக்ஷிண
பாரதத்தை நாளது மாதம் முதல் எதிர்நோக்கி நிற்கும். உலக
சுபிக்ஷ சத்ரு பாதைகளை நிவர்த்தி செய்து கூடியவரையில்
இவ்வருஷத்திய துர்கிரகங்களுடைய பாதைகளை விலக்கி 100க்கு
70 அம்சம் சுபத்தைத் தந்து ஈதிபாதைகளை விளக்கி இயற்கைகளை
சரியாக நடக்கச்செய்து தெக்ஷிணபாரதத்தை செழிக்கச்செய்யும்.
ஆனாலும் ஷை மாதம் முதல் தெக்ஷிணாயனம் முடிய முதலில் கண்ட
காரணத்தால் அதாவது (சூரியாங்காரக சம சாலப்ரவேசத்
தால்) மகாஜனங்களுக்கு பயத்தையே உண்டுபண்ணும்.
இயற்கைகளை காலாகாலத்தில் சரிவர நடக்கும்படி செய்யாது
ஆதலால் தென்தேச மக்களிடம் ஆஸ்தீக புத்தியும் தெய்வ
பற்றுதலும் அதிகமானதாலும் நமது தெக்ஷிண பாரதத்தில்
அடிக்கடி மகாயக்ஞங்களும் சிவவிஷ்ணு ஆலயங்களில் லக்ஷம்
கோடி அர்ச்சனைகளும் மகாப்ரதிஷ்டைகளும் நடந்து வருவதால்
நமது தக்ஷிணதேசமே உலகப் பூராவையும் காக்கும் இருந்
காலும் ஆஸ்தீக சஜ்ஜனங்கள் பெரியோர்கள் எல்லோரும்
ஒன்று சேர்ந்து இந்த தெக்ஷிணாயணம் முதல் ஒவ்வொரு
மாதமும் ஞாயிறு, செவ்வாய்க் கிழமைகளில் சூரியாங்காரகர்
களுக்கு லக்ஷஹோமங்களும் மற்ற கிரகங்களுக்கு சாதாரண
ப்ரீதிகரமாகவும் லோகசுபிக்ஷத்துக்காக நடத்திக்கொண்டுவர
சகல மங்களமும் உண்டாகும். நமது தேசம் சுபிக்ஷம் அடையும்.
கடவுள் காப்பாராக.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

Sri Panchanathiswaraswami Devasthanam, Tiruvaiyaru.

I and my family had the unique advantage of offering worship in the temple today 6–6–63 Apart from the temple being kept in a very strikingly neat condition. I was greatly impressed with the devout way the worship is done in the Sri Panchanadeeswara and Goddess Dharmasamvarthani shrines and the adjunct shrines. I find it hard to leave each Shrine. The devotion shown by the Gurukkals and the Oduvar meet the heart. The beauty of Goddess Dharmasamvardhani is indescribable. One feels that he should repeatedly go to this temple & offer worship and that is the feeling I had. Every one connected with the temple was good enough to help me to offer worship.

(Sd.) R. Narasimman,
District & Sessions Judge,
Thanjavur.

6—6—63.

மதிப்புரைகள் :

## முல்லையும் பூத்தியோ ?

( கட்டுரைகள் )

ஆசிரியர் : வித்துவான். செ. வேங்கடராமச் செட்டியார், தமிழாராய்ச்சி விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்; விற்பனை உரிமை :- பாரி நிலையம். 59, பிராட்வே, சென்னை 1. பக்கங்கள் : 180. விலை ரூ. 3—00.

திரு. செட்டியாரவர்கள் இலக்கிய ஆராய்ச்சியிற் பல்லாண்டுகளாக ஈடுபட்டுத் தாம் பெற்ற இன்பத்தைப் பிறர்க்கும் அழகிய நடையில் எடுத்துரைத்து வருபவர். இவரது இப்புதிய கட்டுரைத் தொகுதி ( பதினொன்கு ) இலக்கியங்களைப் பொருளாகக் கொண்டு இயங்குகின்றது. பெருஞ்சாத்தனிறந்த பின்னை கீரத்தனார்பாடும் புறப்பாட்டில் "முல்லையும் பூத்தியோ" என வரும் நயமிக்க தொடரை விளக்கியுரைப்பது முதற்கட்டுரை. கவிஞர் கண்கள், கம்பரும் சங்க நூல்களும், வாழ்வின் கடைக் கோட்காலம், பழந்தமிழர் அழகியல் - இனிய ஆராய்ச்சி நல மிக்க கட்டுரைகள். பாரியொடு மூவேந்தர் போர் 'பாரிகாதை' யின் வேறுபட்ட உண்மையை விளக்குகின்றது. தணிகைப் புராணக்களவுப் படலப் பொருள் விளக்கமே 'சிற்றின்பத் துறையில் பேரின்ப நெறி'. ஆசிரியரின் பணியைப் பாராட்டுவதுடன் தமிழ்மக்களை வாங்கிப் பயின்று இன்புற ஆற்றுப் படுத்துகிறோம். — புலவர் - வேலன்.

## நுண்பொருள் விளக்கம்

( கட்டுரைகள் )

ஆசிரியர் : பன்மொழிப்புலவர். திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள்; கிடைக்குமிடம்; பாரி நிலையம், நெ. 59, பிராட்வே, சென்னை 1. பக்கங்கள் 144. விலை ரூ. 1—80 ந. பை.

இலக்கண நுட்பங்களை ஆழமாக நுனித்தறிந்து எடுத்து விளக்குவதைத் தம் வாழ்நாளின் நற்பணியாகக் கொண்டவர் திரு. ரெட்டியார் அவர்கள். பல்லாண்டுகளாகச் சென்னைப் பல்கலைக் கழகத்திற் பணியாற்றிய இப்பெரியார் அவ்வப்போது வெளியிட்ட இலக்கண நுண்பொருள் விளக்கங்களில் பதினொன்று இந்நூலாக மலர்ந்துள்ளன. 'தெவுவா தேவுவா' 'நக்கீரரா நற்கீரரா' — என்பவை உண்மையுணர்த்தும் பாங்குடையவை. 'பன்மைசுட்டிய பெயர் பற்றியும்', 'இன்னுன் ஏது' பற்றியும் விளக்கும் கட்டுரைகள் சேனாவரையர் முதலியோர் கருத்தை விளக்கி ஆசிரியர் கருத்தைத் தெளிவாக்குகின்றது. நிலையான மொழிப்பணியாகிய இதனை வழங்கியதற்கு ஆசிரியரையும், பொருள் உதவிபுரிந்த புதுச்சேரி குகா கம்பெனி உரிமையாளர் திரு. பி. என். இராஜமாணிக்கம் பிள்ளையவர்களையும் பாராட்டத் தமிழுலகம் கடமைப்பட்டுள்ளது. தமிழ்மொழியில் நுண்மாண் நுழைபுலம் உடையார்க்கு இந்நூல் பெரு விருந்தாகும். — சொ. சிங்காரவேலன் எம். ஏ.



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களை
சென்னை செய்தித்துறை அமைச்சர்,
கனம். திரு. ஜீ, பூவராகவன் B. Sc., (Hons.) அவர்களும்



சென்னை சட்டசபை சபாநாயகர், கனம். திரு. S. செல்லபாண்டியன்
B. A., B. L., அவர்களும் திரிசித்தல்.

nted & Published by K. Sundaresa Iyer. Agent, Dharmapuram Adhinam
at the Gnanasambandam press, Dharm puram ( Mayuram ) 10-7-63.